Registered as a news paper. | யாழ்ப்பாணம் | பக்கங்கள்: பன்னிரண்டு | விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்று மாலை ஆரம்பமாகின்றது
12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஜூலை 9, 10, 11,- 2004 [வெள்ளி, சனி, ஞாயிறு]
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 20 (09.07.2004) வெள்ளிக்கிழமை இதழ்:280

# லண்டனில் பாரிய சுற்றிவளைப்பு;
# 13 ஈழத் தமிழ் இளைஞர் கைது!

## குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாம்!

(லண்டன்)

**லண்டனில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இலங்கை தமிழ் இளைஞர் குழுக்களைக் கைது செய்வதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸார் நேற்றுப் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.**

**லண்டனின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளிலுள்ள 22 இடங்களை 200 க்கும் மேற்பட்ட பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.**

(லண்டன்)

லண்டனில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்களைக் கைதுசெய்வதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸார் நேற்றுப் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

லண்டனின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளிலுள்ள 22 இடங்களை சுமார் இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இந்தத் தேடுத்லின்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பதின்மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது இவர்களிடம் இருந்து வாள்கள், கோடரிகள், பெருமளவு பணம் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

சுமார் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வசிக்கும் லண்டனில் -குற்றச்செயல்கள், வன்முறைக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டி சம்பவம் கனேடிய அரசு கண்டனம்

(கனடா)

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலை கனேடிய அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

குறிப்பிட்ட தாக்குதலிற்கு எந்தக் குழுவும் உரிமை கோரவில்லை.

ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் உண்மை நிலையினை அறிந்து கொள்ள முடியும்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும்.

கனேடிய அரசினதும் மக்களதும் சார்பாக நான் இத்தாக்குதலின் போது இறந்தவர்களின் குடும்பங்களிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிங்குராங்கொட விகாரை மீது நேற்றிரவு குண்டுத் தாக்குதல்!

(கொழும்பு)

கருணா குழுவினர் 14 பேர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் ஹிங்குராங்கொடையிலுள்ள போதிருக்கராமய விகாரை மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றிரவு 7.30 மணியளவில் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் அந்த விகாரையின் விகாராதிபதியான வண. லெந்திகல சுதாசிதேரர் படுகாயமடைந்தார். இவர் உடனடியாக ஹிங்குராங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அண்மையில் மட்டக்களப்பிற்கு செல்லவெனக்கூறி இந்த விகாரையில் தங்கியிருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதும் அவர்களை நீதிமன்று உடனடியாகவே பிணையில் விடுவித்ததும் குறிப்பிடத்தக்கது.(01)

## சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட பெண் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பணிபுரிபவர்!

### பொலிஸ் விசாரணையில் தகவல்



தற்கொலைக் குண்டுதாரி

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய குண்டுத் தாக்குதலின் பின்னர், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மற்றைய யுவதி, தான் தற்கொலைதாரியை அழைத்துவந்ததை ஒப்புக்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கன்னாதிட்டி - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியலீலா செல்வக்குமரன் என்ற இந்தப் பெண், கொழும்பு - பழைய சோனகதெருவில் விடுதியொன்றில் தங்கியிருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஈ.பி.டி.பியினருடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்த இந்தப் பெண் - பல தடவைகள் அமைச்சு அலுவலகத்துக்கு வந்து சென்றுள்ளார். அமைச்சரைச் சந்திப்பதற்கு முன்பாகவுள்ள பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விவரங்களை திரட்டுவதற்காகவே தாம் அடிக்கடி அங்கு வந்து சென்றதை விசாரணையின்போது அந்தப் பெண தெரிவித்தார்.

தற்கொலை குண்டுதாரியுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னர் கொண்டுவந்த குண்டுகளே இப்போது கொழும்பில் வெடிக்கின்றன

### ஐ.தே.க மீது ஜே.வி.பி பாய்ச்சல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் கொண்டுவரப்பட்ட சமாதானத்திட்டத்தின் பிரதிபலனாகவே நாட்டின் பாதுகாப்பு பூச்சியத்திற்கு இறங்கியுள்ளது. எனவே நாட்டின் தேசிய பாதுகாப்பை சக்தி மிக்கதாக ஆக்குவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணையவேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எங்களுக்கு இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்த பொய்யான சமாதான நடவடிக்கையின் பிரதிபலனாலாகும்.

கரும்புலிகள் - கொழும்பு நக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க சேவையிலுள்ள 4000 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் நிலவும் 4000 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரசு துறையில் தனியார் மயமாக்கலுக்கு அரசாங்கம் முற்றுப் புள்ளி வைக்கவுள்ளது. அத்துடன் ஊழியர்களுக்கு அனத்துச் சலுகைகளும் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இடைநிறுத்திய காரணத்தாலேயே புலிகளை கைதுசெய்ய முடியவில்லை

### பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இடைநிறுத்தியமையாலேயே கொழும்பு நகரில் தங்கியுள்ள கரும் புலிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பயங்கரவாத ஒழிப்புப் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருமளவானோரை கொலை செய்வதற்கு மாரியம்மன் என்ற பெண் புலி உட்பட 17 புலிகள் கொழும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் கைக்கூலிகள் இருவருக்கு புலிகள் நேற்று மரணதண்டனை விதிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியத்தையும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் வண்ணம் கருணாவின் கைக்கூலிகளாகவும் இராணுவப்புலனாய்வாளர்களின் உதவியுடனும் செயற்பட்ட இருவருக்கு நேற்றுக்காலை 10 மணியளவில் மட்டக்களப்பு இலுப்பையடிச் சேனைச் சந்தியில் வைத்து விடுதலைப்புலிகளினால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த பாலசுந்தரம் சிறீதரன் (வயது - 23) என்பவருக்கும் பன்குடாவெளியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுந்தரராஜன் (வயது 24) என்பவருக்குமே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

இவர்களிடமிருந்து கிளைமோர், கைக்குண்டுகள் இரண்டு ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய மகசீன் மூன்று, கைத்துப்பாக்கி ஒன்று,

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# காலாவதியான பொருட்கள் வன்னிப் பகுதியில் அழிப்பு!

## விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

தமிழீழ நிதித்துறையின் விலைக கட்டுப்பாட்டுப் பகுதியினரும் பொதுச் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் - புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு ஆகிய பகுதிகளில் வாணிப நிலையங்கள் மற்றும் மருந்தகங்களைப் பார்வையிட்டு பரிசோதித்த போது காலாவதியான, ரூபா முப்பதாயிரம் பெறுமதியான பிஸ்கட் வகைகள், மாஜரின், குழந்தைகளுக்கான பால்மா, உணவுவகைகள், இனிப்புவகைகள், டிப்பிரிப் மற்றும் மருந்துவகைகள் உட்பட பல பொருட்கள் வாணிபர்களின் அனும்தியுடன் அழிக்கப்பட்டன.

எனவே நுகர்வோராகிய மக்களை இது தொடர்பான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பொருட்களின் காலாவதித் திகதி, விலை மற்றும் பழுதானவற்றைத் தீர ஆராய்ந்து பெற்றுக்கொள்ளுமாறு நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (108)

### ஒலி-ஒளி நாடாக்களின் அறிமுக விழா இன்று

கரும்புலிகளின் உணர்வுகள் தாங்கிய சிறப்பு வெளியீடுகளான புயல் புகுந்த பூக்கள் வீடியோப்படம், செயல்வீரனின் கரும்புலிகள் பாகம்-7, இசைவாணர் கண்ணனின் கடற் கரும்புலிகள் பாகம் - 8, கரும்புலிகள் வரலாற்றுடன் உயிராயுதம் - 5 ஆகியவற்றின் அறிமுகவிழா கிளிநொச்சி இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை லெப். கேணல் நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்ற, தேசியக்கொடியை மகளிர் அரசியற் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஏற்றுவார். தலைமையுரையை அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் நிகழ்த்த முதற்பிரதியை வே. பாலகுமாரன் பெற்றுக்கொள்வார்.

### அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டி


அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளிடையே நடைபெற்று வருகின்ற கிரிகெட் போட்டித் தொடரில் -

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதும் போட்டியும்,

சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானதத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன கல்லூரியினை எதிர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டியும் இன்று நடைபெறவுள்ளன. (58)



நேற்று யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்த ஜப்பான் குழுவினர் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரை சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம்.



இலங்கை வங்கியின் தன்னியக்கப் பணம் எடுக்கும் இயந்திரம் (ATM) ஒன்று அண்மையில், யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலருகே வங்கியின் பிரதி பொது முகாமையாளர் பி.ஏ.சி.பெர்னாண்டோ திறந்து வைப்பதையும், அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரகுமார் மற்றும் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு.மோகனதாஸ் நிற்பதையும் காணலாம்.

## நீதிமன்றச் செய்திகள்

### மணல் கடத்தியோருக்கு தண்டப்பணம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பகுதியில் மணலை களவாடியமைக்கும், உழவு இயந்திரத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி மணலைக் கொண்டு சென்ற குற்றத்துக்குமாக ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் மணலைக் களவாடி உழவு இயந்திரத்தில் ஏற்றி சென்றார் என்று கோப்பாய் பொலிசாரினால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிவான் ஆர்.ரி. விக்கினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகள் குற்றத்தினை ஒப்புக்கொண்டதற்கு அமைய 5000 ரூபா தண்டம் செலுத்த உத்தரவிடப்பட்டது. அத்துடன், 3000 ரூபா தர்மப்பணமாக விழிப்புலனற்றோர் சங்கத்திற்குச் செலுத்துமாறும் சான்றுப்பொருளான மணலை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையளித்த பின்பு உழவியந்திரத்தினை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்குமாறும் கட்டளையிடப்பட்டது.

இதேவேளை - இருபாலையைச் சேர்ந்த கு.திலீபன் என்பவருக்கு மணலைக் களவாடி உழவியந்திரத்தில் ஏற்றிச் சென்ற குற்றத்திற்காக ரூ.10 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது.

இவருக்கு எதிராக யாழ்.சிறு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் எதிரிகள் குற்றத்தினை ஒப்புக்கொண்டதற்கு அமைய தண்டம் 10 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டு தர்மப்பணமாக சிவபூமி பாடசாலைக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கவும் மணலை யாழ்.முடியா பள்ளிவாசல் புனரமைப்பு வேலைக்கு கையளிக்குமாறும் உழவு இயந்திரத்தினை யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்குமாறும் கட்டளையிட்டார்.

### 1000 ரூபா திருடியவருக்கு சிறைத்தண்டனை விதிப்பு!

ஆயிரம் ரூபாவை திருடிய பருத்தித்துறையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு மூன்று வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஓடக்கரை பருத்தித்துறையைச் சேர்ந்த நபர் 1000 ரூபாவை திருடியதாக யாழ்.நீதிமன்றில் சிறு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் முறைப்பாடு செய்யப்பட்டது. எதிரி குற்றத்தினை ஒப்புக்கொண்டதற்கு அமைய நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா 3 மூன்று வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியிருந்தார்.

அத்துடன், நீதி மன்ற பொலிஸ் சார்ஜன்ட், எதிரியின் கைவிரல் அடையாளத்தைப் பெற்று அதை பதிவாளருக்கு தீர்வு விபரத்துடன் அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார்.

### கண்காட்சி

(மட்டுவில்)

யாழ்.மட்டுவில் சந்திரமௌலீச வித்தியால மாணவர்களது திறமையினை வெளிக்கொணரும் ஆக்கத்திறன் கண்காட்சி இன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாணவர்களது பல்வேறு பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். (24)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று முதல் அர்ஜுன், அபிராமி, மணிவண்ணன், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த வாமனன்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2725)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த கில்லி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு8.45(பு.நே)
"SHE"
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், அமோகா, பூமிகா, தாமு நடித்த ஜே ஜே
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-2723)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி அறிவித்தல்**

01. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 ஏப்ரல் மாதத்துக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான சிவப்பு நாட்டரிசியை (புழுங்கல்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ப.நோ.கூ.சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம | அரிசியின் அளவு ஏப்ரல் (MT) |
|---|---|---|
| 01 | சாவகச்சேரி | 190 |
| 02 | கைதடி | 70 |
| 03 | கொடிகாமம் | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 |
| 05 | கட்டைவேலி-நெல்லியடி | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 |
| 07 | புலோலி | 27 |
| 08 | மருதங்கேணி | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 |
| 10 | நல்லூர் | 161 |
| 11 | அச்சுவேலி | 154 |
| 12 | நீர்வேலி | 115 |
| 13 | மானிப்பாய் | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 |
| 17 | சங்கானை | 183 |
| 18 | சுன்னாகம் | 196 |
| 19 | புங்குடுதீவு-நயினாதீவு | 40 |
| 20 | வேலணை | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 |
| 22 | காரைநகர் | 55 |
| 23 | தீவகம் | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 |
| | மொத்தம் | 2500 |

02. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/- வை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.07.09 திகதி தொடக்கம் 2004.07.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/- வை அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்வி கோரப்படவுள்ள அரிசி - சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

5. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம்). என முகவரியிடப்பட்ட நீள தபாலுறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2004.07.23 பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

06. கேள்விப் பத்திரத்தின் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் 'சிவப்பு நாட்டுப் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல் வேண்டும்.

07. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அந்தச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதை உடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 % மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Perform ance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை, சந்தை விலையிலும் பார்க்க எந்தக் காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

08.07.2004. சி/2751

# ரவி கருணாநாயக்கவை சிறைக்கு அனுப்ப தன்னிடம் போதிய ஆதாரங்கள் உள்ளனவாம்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்கவை பத்துமுறை சிறைக்கு அனுப்பக்கூடியளவுக்கு, அவர் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களை வைத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலுக்காக முல்லேரியாவில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

ரவி கருணாநாயக்க தொடர்பாக நான் எந்தக் கருத்தையும் கூற விரும்பவில்லை. ஏனெனில் அவர் தொடர்பான வழக்கு தற்போது நீதிமன்றத்திலுள்ளது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதற்கு முன்னாள் வர்த்தக நுகர்வோர் அமைச்சரான ரவி கருணாநாயக்காவே பொறுப்பேற்கவேண்டும். இந்தக் காலப்பகுதியில் 30 ரூபாக்கு விற்கவேண்டிய பொருட்களை ச.தொ.ச. 60 ரூபாவுக்கு விற்பனை செய்ததாகவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார்.

# தயாரத்ன தேரர் மீதான இடைக்கால தடை நீக்கம்

ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அக்மீமன தயாரத்ன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு எதிராக - கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்த இடைக்கால தடையுத் தரவு நேற்றுமுன்தினம் நீக்கப்பட்டது.

இந்த இடைக்காலத் தடையுத்தரவை நிரந்தரத் தடையுத்தரவாகப் பிறப்பிக்குமாறுகோரி மனுதாரர் செய்த மனுவை விசாரித்த பின் கொழும்பு மாவட்ட நீதிவான் எஸ்.எம்.எஸ்.சமரக்கோன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கதலுவே ரத்னசீஹா தேரர் சமர்ப்பித்த மனுவொன்றை ஆராய்ந்த நீதிவான், கடந்த ஜுன் மாதம் 4 ஆம் திகதி அக்மீமன தயாரத்ன தேரருக்கு இடைக்காலத் தடையுத் தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளரான சம்பிக்க ரணவக்க, உடுவே தம்மாலோக தேரர், கொலன்னாவ சிறி சுமங்கல தேரர் உட்பட சிலர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

தம்மிடமிருந்து பலவந்தமாகப் பெறப்பட்ட கடிதமொன்றைப் பயன் படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மனுதாரர் தனது மனுவில் குற்றஞ்சாட்டியிருந்தா. இந்த வழக்கு தொடர்பாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி பிரதிவாதிகள் தரப்பில் கருத்துரைகளை தெரிவிக்குமாறு நீதிவான் பணிப்புரை வழங்கியுள்ளார்.

# இலங்கைக்கான இந்திய தூதுவராக நிருபமா ராவ் நியமிக்கப்பட்டார்!



இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நிருபமா ராவ் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய அரச வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பதவி வகித்து வரும் இந்தியத் தூதுவர் நிருபம் சென், ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்படவுள்ள நிலையிலேயே இப்புதிய நியமனம் குறித்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இந்தியா அரசின் வெளிவிவகார அமைச்சில் மேலதிக செயலாளராக கடமையாற்றும் நிருபமா ராவ் பல வெளிநாடுகளில் கடமையாற்றிய அனுபவம் பெற்றவராவார்.

ஏற்கனவே கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தில் கடமையாற்றிய அனுபவம் கொண்ட நிருபமா ராவ் விரைவில் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளார்.

# மதமாற்ற தடைச்சட்டத்தை விரும்பாதோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம்!

## ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிரானவர்கள் வேண்டுமானால் உயர்நீதிமன்றம் வரைக்கும் செல்லலாம் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், புத்தசாசன அமைச்சருமான ரட்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தமது தனிப்பட்ட நலன்களுக்காக மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களையும், தேவையற்ற சூழல்களையும் உருவாக்குவதற்கு ஒரு சிலர் முயல்கின்றனர்.

அமெரிக்க மற்றும் தென்கொரிய கிறிஸ்தவ அமைப்புக்களின் நிதியுதவியுடன் புதிதாகத் தேவாலயங்களைக் நிர்மாணித்துள்ளவர்களே இதுகுறித்து அதிக அக்கறை காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் - தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் இவர்கள் தீவிர மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

சட்டவிரோத மதமாற்ற நடவடிக்கைகள் மதமாற்றச் தடைச்சட்டத்தினால் பாதிக்கப்படுமானால், வெளிநாட்டு நிதியுதவிகள் பாதிக்கப்பட்டு விடுமோ என குறிப்பிட்ட அமைப்புக்கள் அஞ்சுவதாகவும், தமது அரசின் இந்த மதமாற்றத் தடைச் சட்டத்தினால் முன்னரே நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்களுக்கு எதுவித பாதிப்புக்களும் ஏற்படாதெனவும் குறிப்பிட்டார்.

# எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளிவரும்!

(கொழும்பு)

கடந்த 2002 ஆம் ஆண்டு எழுதுவினைஞரைத் தெரிவுசெய்வதற்காக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்திடம் இருந்து இந்தப் பரீட்சை முடிவுகள் பொதுநிர்வாக அமைச்சு விடுத்த கோரிக்கையை அடுத்து பரீட்சை முடிவுகள் அனைத்தும் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சையின் புள்ளி அடிப்படையில் நாடளாவிய ரீதியில் உள்ள அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தப் பரீட்சையில் 3 லட்சத்து 60 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தே)

# பதினைந்து வருடகால உள்நாட்டு யுத்தத்தில் ஒரு வெளிநாட்டவராவது பலியாகவில்லை!

## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

நாட்டில் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக - உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றபோதிலும்கூட, எந்தவொரு வெளிநாட்டு உல்லாசப் பயணியும் கொல்லப்படவில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற தெற்காசியாவுக்கான உலக சுற்றுலா ஆணைக் குழுவின் 45 ஆவது கூட்டத்தொடரில் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில் -

பிரிட்டனிலிருந்து மட்டும் சுமார் 5 லட்சத்து 60 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இதுவே அதிகபட்ச எண்ணிக்கை ஆகும்.

இந்த எண்ணிக்கையை அடுத்த ஆண்டில் மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கருணாவுடன் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை

## இராணுவத்தளபதி கூறுகிறார்



இலங்கை இராணுவத்தினரை உலகினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சிறந்ததொரு இராணுவமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் கருத்துத் வெளியிடுகையிலேயே இராணுவத்தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

கருணாவிற்கும் இராணுவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. எனக்குத் தெரிந்தவரை படையினர் கருணாவிற்கு ஒத்துழைப்பு எதனையும் வழங்கவில்லை.

யுத்தம் ஒன்று ஏற்படுமாக இருந்தால் எமது இராணுவத்தினரே அதில ஈடுபடுவர். மற்றையவர்களை இணைத்து யுத்தம் செய்யவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அவ்வாறு யுத்தம் செய்யவும் முடியாது.

ஜனாதிபதியும், அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நாட்டிற்கு யுத்தம் மூலம் அல்லாது, சமாதானத்தைப் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வலி.வடக்கு மக்களுக்கான அறிவித்தல்

(தெல்லிப்பளை)

வலி.வடக்கு பிரதேசங்களின் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 600 மீற்றர் எல்லைக்குள் வீடு, காணி மற்றும் விவசாய நிலங்களைச் சொந்தமாக உடையவர்கள் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருப்பின் அவற்றுடன் அல்லது விளக்கக் கடிதத்துடன் தமது உடமைகள் அமைந்துள்ள கிராம அலுவலர்களைச் சந்திக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# புலிகள் மீதான அமெரிக்க தடையை நீக்குமாறு கூட்டமைப்பு கோரினால் எதிர்க்கக் கோருகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தினால், அதற்கு அரசாங்கம் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோர் தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ளனர்.

இவ்வார இறுதிக்குள் அமெரிக்காவின் தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா ரொக்காவைச் சந்திக்கவுள்ள இவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு அவரிடம் வலியுறுத்துவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில், இத்தகைய வேண்டுகோள் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் விடுப்பார்களாக இருந்தால், அது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் அத்துரெலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பதுளை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பொலிஸார் கண்ணீர்புகை வீச்சு

பதுளை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர்.

ஊவா மாகாணத்திற்கான மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு இந்தப் பிரசாரக் கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் கூட்டத்தினை நடத்தக்கூடாதென பொலிஸார் ஏற்கனவே அறிவித்திருந்தும், அங்கு கூட்டம் நடத்தப்பட்டதாலேயே பொலிஸார் கண்ணீர்ப்புகையடித்து அவர்களை விரட்டியடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தாம் அங்கு கூட்டத்தை நடத்தாது விலகிச் செல்லமுற்பட்டபோது பொலிஸார் தம்மீது தாக்குதலை நடத்தியதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

# டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை சந்திக்க ஆவலாக இருக்கிறேன்!

## லாரா கூறுகிறார்



இங்கிலாந்து அணிக்கு எதிரான எதிர்வரும் நான்கு போட்டிகள் அடங்கிய டெஸ்ட் தொடரை எதிர்கொள்ள ஆவலாக இருக்கிறேன் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் லாரா நேற்று செய்தியாளர்களிடம் கூறினார்.

நட்வெஸ்ட் ஒருநாள் முத்தரப்பு தொடரின் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்று எனவும், இங்கிலாந்து அணிக்கு எதிரான எதிர்வரும் டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் இதே நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் ஆடுவார்கள் என்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் பிறைன் லாரா கூறியுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-2 என்ற கணக்கில் சமன்செய்து திரும்பியது இங்கிலாந்து. அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இங்கு இங்கிலாந்துடன் இந்த முத்தரப்பு தொடரில் மூன்று போட்டிகளில் மோதி அவற்றில் இரண்டை நாங்கள் வென்றுள்ளோம்.

அதேபோல டெஸ்ட் தொடரிலும் இங்கிலாந்து அணிக்கு கடுமையான சவாலை ஏற்படுத்த எங்களால் முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம். மேற்கிந்தியத் தீவுகளில் இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரை வென்று திரும்பியுள்ளது.

அதற்குப் பதிலளிக்கும் விதமாக இங்கிலாந்தில் அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதில் நானும் எங்கள் வீரர்களும் மிகுந்த ஆவலுடன் இருககின்றோம்.

அடுத்துவரும் இரண்டு மாதங்களும் எங்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்று லாரா லோர்ட்சில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியுள்ளார்.

## மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டி

# பெண்கள் பிரிவில் மூன்றாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி பெற்றது!


மாவட்ட மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி ராமநாதபுரம் (மேற்கு) வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும் பெற்றன.

அணிநடைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், முல்லைத்தீவு யோகபுரம் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் அணிநடைப் போட்டியில் வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், கிளிநொச்சி ராமநாதபுரம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி ராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

(12)




## ஆசிய கிண்ண போட்டி

# பாகிஸ்தான் அணியில் அக்தரும் இடம்பெற்றார்



இந்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான 14 வீரர்கள் அடங்கிய பாகிஸ்தான் அணியும் நேற்றுமுன் தினம் அறிவிக்கப்பட்டது.

இம்மாதம் 16 ஆம் திகதி 6 நாடுகளுக்கு இடையேயான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தொடங்குகின்றன. 'ஏ' பிரிவில் பாகிஸதான், பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளும், 'பி' பிரிவில் இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணியை நேற்றுமுன் தினம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் வசீம் பாரி அறிவித்தார். அணியின் கப்டனாக இன்ஸமாம் உல் ஹக் நீடிப்பார் என்றும், காயம் காரணமாக சர்வதேச போட்டிகளிலிருந்து விலகியிருந்த அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் முழு உடல் தகுதியுடன் தற்போது அணியில் இடம்பெற்றுள்ளார் என்றும் வசீம் பாரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பொப் வூல்மரும், பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாமும் அணித் தேர்வின்போது உடனிருந்ததாகவும், அவர்களிடமும் ஆலோசனை பெறப்பட்டதாகவும் வசீம் பாரி தெரிவித்தார்.

**பாகிஸ்தான் அணி**

இன்ஸமாம் உல் ஹக் (கப்டன்), யூசுப் யுகானா (துணை கப்டன்), இம்ரான் பர்ஹத், யாசிர் ஹமீத், இம்ரான் நசீர், யூனுஸ்கான், சொகைப் மாலிக், அப்துல் ரஸாக், மொயின்கான், முகமது சமி, சொகைப் அக்தர், டனிஷ் கனேரியா, ராணா நவிதுல்ஹசன்.

# முரளிதரன் முதலிடத்தில் தொடர்ந்தும் இருப்பார்!

## ஷேன் வோர்ன் கூறுகிறார்



கெய்ன்சில் இன்று தொடங்கவுள்ள இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் உலக சாதனை படைப்பது கடினமான ஒன்று என்று அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளார் இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன். 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 520 விக்கெட்டுக்களோடு வோர்ன் துரத்திக்கொண்டிருக்கிறார்.

இலங்கை அணிக்கு எதிரான இந்த நட்புத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி சென்றவாரம் டார்வினில் நடைபெற்றது. 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அந்தப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி வென்று தொடரில் முன்னிலைபெற்றது. டார்வினில் ஆடுகளத்தில் சென்றவாரம் சிறப்பாக பந்துவீசிய வோர்ன் இலங்கை அணியின் முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி அணிக்கு உதவினார்.

உலக சாதனை புரிவதற்கு இன்னும் 8 விக்கெட்டுக்கள் தேவை என்ற நிலையில் இன்று கெயின்சில் இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் வோர்ன் களமிறங்குகிறார்.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான கெயின்ஸ் ஆடுகளத்தில் 8 விக்கெட்டுக்களை எடுப்பது கடினமான ஒன்று என்று வலைப்பயிற்சியின்போது செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் வோர்ன் கூறினார்.

அவுஸ்ரேலியாவில் பேர்த்தில் உள்ள ஆடுகளத்திற்கு அடுத்தபடியாக வேகப்பந்து வீச்சுக்கு ஏதுவான ஆடுகளம் என்பது எனது கருத்து. எனவே முரளிதரனின் உலகசாதனைக்கு இந்தப் போட்டியில் அபாயம் நேரிடாது என்றும் வோர்ன் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணி வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்!

## இந்திய கிரிக்கெட் சபை செயலர் எஸ்.கே.நாயர் தெரிவிப்பு

(சென்னை)

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடச் செல்லும் இந்திய அணி வீரர்களுக்கு இலங்கையில் பலத்த பாதுகாப்பு வழங்கப்படும் என இந்திய கிரிக்கெட் சபை செயலர் எஸ்.கே.நாயர் கூறினார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் பட்டியலை வெளியிட்ட இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது -

இந்திய அணி வீரர்கள் தங்கும் ஹோட்டலுக்கு அருகாமையில் குண்டு வெடிப்பு நடந்ததாகக் கூறப்படுகின்றது. இது பற்றி தேர்வுக்குழு கூட்டத்தில் ஆலோசிக்கப்படவில்லை.

ஆனால், இலங்கை கிரிக்கெட் சபையுடன் பேசினோம். இந்திய அணி வீரர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் சபை சார்பாகவும் இந்திய வீரர்களின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்படுகிறது.

இதுபற்றி வீரர்கள் யாரும் பயமோ, எந்தவித அச்சமோ கொள்ளத் தேவையில்லை. எனவே இந்திய அணி திட்டமிட்டபடி வருகிற 13 ஆம் திகதி சென்னையிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டுச் செல்லும்.



இவ்வாறு எஸ்.கே.நாயர் கூறினார்.

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏபிசி லீக் சுற்றுப்போட்டியில் -

'பி' பிரிவில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்.அன்ரனீஸ் பி அணி மோதும். ஆட்டம் இன்று பிற்பகல் 4.15 மணிக்கும்,

'ஏ' பிரிவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதும் ஆட்டம் இன்று பிற்பகல் 5.15 மணிக்கும் நடைபெறவுள்ளது.

# ஆசியக் கிண்ண போட்டி; இந்திய அணி அறிவிப்பு!

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி சென்னையில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் அகர்கர் நீக்கப்பட்டுள்ளார். பார்த்தீவ் பட்டேலுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி இலங்கையில் வருகிற 16 ஆம் திகதி தொடங்குகின்றது. இதில் இந்தியா, பாகிஸ்த. ன், இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஹொங்கொங் ஆகிய 6 அணிகள் பங்கேற்றன.

இந்த நிலையில் இந்திய அணி தேர்வுக்குழுத் தலைவர் கிர்மானி தேர்வாளர்கள் மற்றும் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் ஆகியோர் சென்னையில் கூடி நேற்றுமுன்தினம் இந்திய அணியைத் தேர்வுசெய்து அறிவித்தனர்.

இதற்காக பயிற்சி முகாமில் பங்கேற்ற 20 வீரர்கள் இடையே பயிற்சி ஆட்டம் நடத்தப்பட்டது. ஆசியக் கிண்ணப் போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் விபரம் -

கங்கூலி (கப்டன்), ராகுல் ராவிட் (துணைக் கப்டன்), சச்சின் டெண்டுல்கர், யுவராஜ்சிங், வி.வி.எஸ்.லக்ஷ்மன், வீரேந்தர் ஷேவாக், முகமட் கைவ், பார்த்தீவ் பட்டேல், அனில் கும்ப்ளே, ஹர்பஜன் சிங், சகீர்கான், அசிஷ் நெஹ்ரா, இர்பான் பதான், எல்.பாலாஜி.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஒரு நாள் போட்டியில் ஆடிய வேகப்பந்துவீச்சாளர் அகர்கர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கூடுதல் விக்கெட் கீப்பராக பார்த்தீவ் பட்டேல் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் அணியில் களமிறங்கி களத்தடுப்பு செய்வாரா என்பது கேளவிக்குறிதான். உலகக்கிண்ண போட்டியில் கடைசிவரை வெளியிலிருந்து ஆட்டத்தை வேடிக்கை பார்த்தது போல்தான் அவர் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹர்பஜன் சிங் காயம் காரணமாக கடந்த 6 மாதம் ஆடவில்லை. கடைசியாக அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் ஆடிய அவர், கைவிரலில் சத்திரசிகிச்சை செய்து குணமாகி களம் திரும்பியுள்ளார்.

பயிற்சி முகாமில் பங்கேற்ற தமிழர் வீரர் ஹேமங் பதானி, முரளி கார்த்திக், ரோகன் கவாஸ்கர் ஆகியோருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.





சுவிஸில் நடைபெற்ற மாவீரர் நினைவு உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சில காட்சிகள்...





# நெடுந்தீவை வந்தடைந்த தமிழ் அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

தமிழக அகதிமுகாம்களில் தங்கி இருந்து கடந்த செவ்வாய் அன்று நெடுந்தீவை வந்தடைந்த, 10 குடும்பங்களை சேர்ந்த 22 அகதிகளும், அவர்களின் சொந்த இடங்களான மன்னார், வவுனியா பகுதிகளுக்கு யாழ். செயலகத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை நெடுந்தீவிலிருந்து, நெடுந்தீவு உதவி அரச அதிபரால் யாழ். செயலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 22 பேரும், யாழ். செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளப்பட்டு, சொந்த இடங்களுக்குச் செல்ல ஒரு குடும்பத்துக்கு தலா ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கி, செயலகப் லொறி மூலம் முகமாலை சோதனைச் சாவடி வரை கொண்டு சென்று விடப்பட்டனர்.

இதேவேளை, ஐ.ஓ.எம் அமைப்புச் சேர்ந்த அதிகாரிகள், இந்த அகதிகளை யாழ். செயலகத்தில் சென்று சந்தித்து, அவர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டனர். இவர்களது சொந்த இடங்களுக்குச்சென்று, அங்குள்ள ஐ.ஓ.எம். அமைப்புச் செயலகங்களைச் சேர்ந்த அலுவலர்களைச் சந்தித்து, உடனடி உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், பதிவு அட்டை ஒன்றையும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன.

அத்துடன், யுஎன்எச்.சி.ஆர். அதிகாரிகளும் மீள்குடியமர வந்த அகதிகளை, யாழ். செயலகத்தில் சந்தித்து பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

செவ்வாயன்று மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 20 பேரும், வவுனியாவைச் சேர்ந்த 02 பேரும், படகு மூலம் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு ஏமாற்றி, நெடுந்தீவுக் கரையிலே இறக்கி விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## வீடமைப்புக் கடனுக்காக விண்ணப்பங்கள் அதிகரிப்பு

'தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வீடமைப்பு கடன் பெறுவோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்றுவரை 83 குடும்பங்களுக்கு கடனாக 50 ஆயிரம் ரூபா வழங்கப் பட்டிருப்பதாகவும் மேலும் 30 விண்ணப்பங்கள் கொடுப்பனவுக்காக வீடமைப்பு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


வீடமைப்பு அதிகாரசபை கொடுப்பனவுகளான வேலைகளை பார்வையிட்டு கொடுப்பனவுகளை துரிதப்படுத்தி வழங்கி உதவுகின்றது. (29)

# போதிய மின்கம்பங்கள் இருந்தும் மின்சாரம் வழங்க இழுத்தடிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்திற்கு மின்சார விஸ்தரிப்பு வேலைகளுக்கென கடந்தவருடம் முதல் ஒதுக்கப்பட்ட 15 இலட்சம் ரூபாவுக்கு வேலைகள் மேற்கொள்ளப்படாமல் காலத்தைக் கழிக்கும் இலங்கை மின்சார சபையினரின் நடவடிக்கையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு மேற்கு மின்சார விஸ்தரிப்புக்கு என கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாவுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படாததுடன் ஒரு தொகுதி மின்கம்பங்கள் இந்த வேலைக்கென கடந்த இரு மாதங்களுக்கு முன்பே நெடுந்தீவிற்கு எடுத்து வரப்பட்டு மின்சார நிலையமருகே போடப் பட்டுள்ளது.



இதேவேளை இந்த வருடம் கிழக் மத்திய பகுதி விஷ்தரிப்புக்கென ஒதுக் கப்பட்ட 5 இலட்சம் ரூபாவுக்கான வேலைகளும் நடைபெறவில்லை என்பதுவும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

# ஆலயத்தினுள் நுழைந்த திருடன் பொது மக்களால் மடக்கிப்பிடிப்பு

சித்தன்கேணி சிவாலயத்தினுள் பட்டப்பகலில் ஓடுபிரித்து இறங்கித் திருடமுயன்றவர் பொதுமக்களினால் மடக்கிபிடிக்கபட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணியளவில் ஆலயப் பூசை முடிந்து புசகர் ஆலயத்தைப்பூட்டி விட்டு சென்றதும் ஆலயத்திற்கு அருகில் வசித்துவரும் ஒருவரே இந்தத் திருட்டு முயற்சியில் ஈடுபட்டார்.

இவர் ஆலயத்தினுள் இருந்த பாத்திரங்கள் மற்றும் பொருட்களையே களவாடும் நோக்கோடு திருட வந்துள்ளார்.

எனினும் இவரது வரவை அறிந்துகொண்ட ஆலய பூசகர் அயலவர்களின் உதவியோடு அவரை மடக்கிப்பிடித்தார்.

குறித்த நபர் தனது நோக்கத்தையும் தனது முயற்சியையும் ஒப்புக் கொண்டதையடுத்து பொதுமக்களால் எச்சரிக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப் படுகிறது. (ப)

# நல்லூர் பிரதேச செயலகத்துக்கு மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு வைத்தியரை நியமிக்குமாறு கோரிக்கை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும முதியோர்களுக்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் பெற வசதியாக மாதத்தில் ஒருநாளாவது பிரதேச செயலகத்தில் வைத்தியர் ஒருவரைக் கடமையாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதியில் வசிக்கும் முதியோர் சமூக சேவை உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொது சன உதவிப்பணம் பெற்று வரும் முதியோருக்கு மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவி, ஊன்றுகோல் போன்றவற்றை வடக்கு - கிழக்கு சமூக நலத்துறை அமைச்சு வழங்கி வருகிறது.

இவற்றை வழங்கும்போது அவர்களிடமிருந்து மருத்துவச் சான்றிதழ்கள் சமர்பிக்குமாறு கோரப் படுகின்றது. இந்த மருத்துவச் சான்றிதழ்களைப் பெற வைத்தியசாலைகளை அணுகுவதில் முதியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்ற பிரதேச செயலகத்தில் மாதத்தில் ஒருநாளாவது மருத்துவர் ஒருவர் பணியாற்ற வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ் சிறு செய்திகள்

### புது மடத்தில் சிரமதானம்

(மட்டுவில்)

புதுமடம் கத்தர் கோயில் பகுதியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிரமதானமும் மக்கள் குழு கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

சூரியா, அன்பு, பூந்தளிர் ஆகிய மகளிர் அமைப்புக்களுடன் சுதுமலை யுவசக்தி சனசமூகத்தினரும் இணைந்து மேற்கொள்ளவுள்ள சிரமதானப் பணியை மேற்கொள்ளவுள்ளனர். (91)

### வாழ்வியல் பயிற்சி கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வாழ்வியல் பயிற்சிக் கல்லூரியில் கற்று, பயிற்சி நிறைவு செய்தோருக்கான சான்றிதழ் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் புனித திரேசம்மா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.

தொடர்ந்து பயிற்சிபெற்ற மாணவர்களின் நாடகம், நடனம் ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (91)

### கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் வறிய மாணவர்களின் கல்வி நலன்களை மேம்படுத்துவதற்காக, பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு அங்கமாக கொடி எழல் நிகழ்வின்போது பெறப்பட்ட நிதியைக் கொண்டு அரியாலை, கொழும்புத்துறை, நல்லூர் ஆகிய பிரசேதங்களில் இனங்காணப்பட்ட, பாடசாலைகளில் கல்வி கற்கின்ற வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, தரம் ஐந்தில் (05) கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான முன்னோடிக் கருத்தரங்குகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

### கல்வயல் விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

(மட்டுவில்)

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் 10.45 வரையான சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 10 நாட்கள் வரை அலங்கா உற்சவமும் இடம்பெறவுள்ளது. (24)

### ஆடிப்பூரத் திருவிழா

(மட்டுவில்)

சாவகச்சேரி நுணாவில் தாளையம்பதி அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி புதன் கிழமை இடம்பெறும்.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 2.30 மணிக்கு பெண்கள் பங்கு கொள்ளும் மங்கள தீபபூஜையும் இடம்பெறும். தீப பூஜையில் பங்கு பற்ற விரும்புவோர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (24)

### ஒலிபெருக்கிகள் அன்பளிப்பு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு சந்திரப்புரம் அருள்மிகு மகா முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு ஏககாலத்தில் இரு தொகுதி ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து தாயகம் வந்து திரும்பிய, இதே இடத்தைச் சேர்ந்த ம.ஸ்ரீ குமரகுரு, ஜ.சிவஞானம் ஆகியோரே இந்த ஒலிப்பெருக்கிச் சாதனைங்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இந்த ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் மற்றும் விசேட நிகழ்வும் இதன் மூலம் ஒலி பரப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

# கட்டணம் செலுத்தத் தவறினால் குடிநீர் விநியோகம் இடைநிறுத்தப்படும்

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையால் கட்டுடை, காக்கைதீவு ஆகிய கிராமங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் இடை நிறுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தெரியவருவதாவது- கட்டுடை, காக்கைதீவு ஆகிய இடங்களுக்கு மாதாந்தம் 5 ரூபா அறவிடப்பட்டு மானிப்பாய் பிரதேச சபையால் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

இரு இடங்களிலுள்ள குடி நீர் பெறுபவர்களில் சிலர் மாதாந்த கட்டணங்களை செலுத்தாமையால் இந்தப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளதாக பாதிக்கப்பட்ட இந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர். (91)

# இறங்குதுறை சேதமடைந்துள்ளதால் கடற்தொழிலாளர்களுக்கு அசௌகரியம்

(சுதுமலை)

காக்கைதீவு இறங்குதுறை பெரும் சேதமடைந்துள்ளமையால் மீனவர்கள் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்பட்டாது உள்ள இந்த இறங்குதுறையில், பாறைக் கற்கள் ஒழுங்கற்ற வகையில் கிடப்பதனால் வள்ளங்களை அணைப்பதுடன், தொழிலாளர்கள் சென்று வருவதிலும் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக காக்கைதீவு கடற்தொழிலாளர் சங்கம் வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினரிடம் இறங்குதுறையை புனரமைத்து தருமாறு வேண்டுகொள் விடுத்துள்ளனர்.

பிரதேசசபை தொழில்நுட்ப அதிகாரிகள் இவற்றை பார்வையிட்டு மிக விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் எனப் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

காக்கைதீவு இறங்குதுறையை அண்மித்த பகுதிகளில் இராணுவ காவலரண் உள்ளதுடன், கரையோரப் பகுதி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த ஒரு பகுதியை மட்டுமே மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

குடாநாட்டின் கரையோர பிரதேசமெங்கும் இராணுத்தினர் காவலரண் அமைத்திருப்பதுடன் முட்கம்பி வேலிகளையும் போட்டு தமது பாதுகாப்பை பலப்படுத்தியதால் மீனவர்கள் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : பி. உமாவேந்தன்
முகவரி : தோப்பு, அச்சுவேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

(சுதுமலை)

பண்டதரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலைய வீதியை புனரமைத்து தருமாறு -அந்தப் பகுதி மக்கள் வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பல வருடங்களாக திருத்தப்படாமலுள்ள இந்த ஒழுங்கை வாகனப் போக்குவரத்துக்கு மட்டுமன்றி தனிப் பிரயாணங்களுக்கும் பெரும் சிரமங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

தற்போது பண்டத்தரிப்பு பிரதான வீதி திருத்தப்பட்டு வருகின்றது. எனவே, இந்த வீதியில் இருந்தே செபமாலைமாதா சனசமூக நிலைய ஒழுங்கையும் செல்கிறது. இந்த வீதி திருத்தத்துடன், தமது ஒழுங்கையையும் திருத்தி தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (91)



# சிநேகிதியே

# திருப்தி அடையும் மனம் இருக்கும் வரை வாழ்வில் மகிழ்ச்சிக் குறைவுக்கு இடமில்லை

சமூகத்தின் பார்வை ஒரு பக்கம் இருக்கட்டும். அதைப்பற்றிக் கவலைவேண்டாம். எங்களின் பார்வை எங்கள் மீதே இருக்கட்டும். பெண்ணானவள் பிறந்து, வளர்ந்து, திருமணம் முடித்து, பிள்ளைகள் பெற்று அவர்களை வளர்த்து ஆளாக்கி ஓய்வு பெறுகிறாள். இதற்கிடையில் வாழ்க்கை முறை எவ்வாறு மாறும் என்று யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு மாற்றங்கள் நிகழும்போதுதான் அந்த வாழ்க்கை முறைபற்றி உணருகின்றோம்.

வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படும் போது அதை நன்கு அறிந்து, ஏன் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன. நல்லதோ, கெட்டதோ என சிந்தித்துப் பார்க்கவேண்டிய தேவை ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாகவுள்ளது. இதன்மூலம் தான் அடுத்துவரும் மாற்றங்களை நல்லதாக எதிர்கொள்ளமுடியும். எதிலும் பிரச்சினைகளுக்கான வழிகளே நிறைய இருக்கின்றன. நல்லது நடக்கும் என்றுதான் நினைக்கின்றோம். ஆனால், அது நடப்பதில்லை. ஒரு நாளும் கெட்டது நடக்கும் என்று நினைத்ததில்லை. ஆனால், அது நடந்துவிடுகின்றது.

அந்த வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையும் இயற்கையானது. ஆகவே, எந்த நேரமும் சந்தோஷம் மிக முக்கியமானதொன்றாகும். எந்தக் கஷ்டங்கள் வந்தாலும் இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எமக்குக் கஷ்டங்கள் இருப்பதை நாங்களாக மறந்து போய்விடுவோம்.

என்ன வாழ்க்கை இது, மற்றவர்கள் எப்படித் திரிகின்றார்கள், உல்லாசமாக வாழ்கின்றார்கள் என்று மற்றவர்களுடன் உங்களை ஒப்பிடாதீர்கள். வாழ்க்கைக்கு தேவையானது ஒருசில தேவைகள்தான். அதற்கு மேலதிகமாக சிந்திக்காதீர்கள். அதற்காக மனதைப் போட்டு உடைக்காதீர்கள். குறைவாகக் கிடைப்பதிலும் திருப்தி அடையக்கூடிய மனம் இருந்தால், கண்டிப்பாக அடுத்தபடியில் நீங்கள் ஆழமான காலினை ஊன்றமுடியும்.

வீட்டின் படியினை மிதிக்கும் போது ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு பிரச்சினை கண்டிப்பாக இருந்த வண்ணமேயுள்ளது. நாங்கள் தான் அந்தப் பிரச்சினைக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும்.

நவநாகரிகம் என்று அநாகரிகம் எங்களின் மீது ஒட்டிக்கொள்கின்றது. அதாவது - உடையில், உணவில், போக்குவரத்தில் இப்படியாக பல மாற்றங்கள். மற்றவர்கள் பார்க்கத்தூண்டும் அளவுக்கு பெண்களின் உடைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த உடைகளின் பாவனையால் பாதிப்பு பெண்களுக்கே ஏற்படுகின்றது. கூடுதலாகச் சாப்பிட்டால் உடற்பருமன் கூடிவிடும் என்று உணவைக் குறைத்து, பல நோய்களை இதன்மூலம் பெற்றுக்கொள்கின்றார்கள்.

மூடநம்பிக்கைகளை வளர்த்தும், உயர்ந்த கலாசாரம் என்னும் இரண்டும் கலந்தநிலையில் கூடுதலான மாற்றங்களைத் தாங்களாகவே ஏற்படுத்தி, அவதிப்படும் மனிதர்கள் - வாழ்க்கையை நன்கு உணராதவர்களாக இன்னும் இருக்கின்றார்கள்.

வளர்ச்சி என்று சொல்லி, ஆண்களுடன் பெண் எந்த இடத்திலும் சரிக்குச் சமனாக நிற்பது பெண் வளர்ச்சியைக் காட்டுகின்றது. அந்த வளர்ச்சி என்ற சொல்லின் கூடுதலான பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது கவலை அளிக்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம் ஆண்களோ, பெண்களோ கிடையாது.

குடும்பத்தில் யார் முதலில் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றார்களோ, அந்தப் பிரச்சினை தானாகவே உருப்பெற்றுவிடும். பிரச்சினைகளுக்கு ஆளாகுபவர்கள் முதலில் தங்களின் மேலுள்ள பிழையைத் திருத்திக் கொண்டு பின்பு பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்டவரிடம் பேசுதல் சிறந்தது.

எந்தப்பிரச்சினை என்றாலும், ஒருவர் மீது நேரடியாக ஒருபோதும் குற்றம் சுமத்தக் கூடாது. அந்தப் பிரச்சினைக்கு உரிய காரணத்தை முதலில் பேசினால் கண்டிப்பாக யார் பிழைவிட்டது என்று தெரிந்துவிடும். உதவிக்கு மட்டும் ஆண்களை நாடுகின்ற பெண்கள் இன்னும் இருக்கின்றார்கள். தனது காரியம் முடிந்ததும் கைகழுவி விட்டுப்போகும் ஆண்களும் இன்னும் இருக்கின்றார்கள். இதற்கிடையில் நாங்கள் தான் உன்னிப்பாகப் பார்த்து வாழவேண்டிய தேவையுள்ளது.

இந்த வாழ்க்கையில் திருமணம் ஒரு முக்கிய கட்டத்தில் நிற்கின்றது. இதனைத் தாண்டும் வரை பெரும் கஷ்டங்கள் நிகழ்ந்துவிடும்.



அதாவது, சீதனம் எல்லைகடந்து சென்றிருக்கின்றது. இதனால் காதல் திருமணம் இதற்கு ஒரு முடிவாகும் என்று நினைத்து, வாழ்க்கையினை அழித்துவிட வேண்டியதாகிவிடும். காதல் திருமணம் கண்டிப்பாக இதற்கு ஒரு முடிவுதான். ஆனால், இன்று காதல் அநாகரிகமாக மாறிவிட்டது. யாரை யார் ஏமாற்றுவார்களோ தெரியாது. இதில் இருபாலாரும் பிழை விடுகின்றார்கள்.

இன்றைய காலத்துக் காதல் - நேரத்தினைப் போக்குவதற்கு என்று சொல்லுவார்கள். அந்தளவுற்கு ஒரு பெண் ஆணை சந்திக்கும் போது பல மணிநேரம் அவனுடன் சிரித்துக் கதைத்துவிட்டு விடைபெற்றுப் போகும்போது, "யாரடி" அது என்று நண்பிகள் கேட்டால் அவன் ஒரு அப்பக்கொத்து என்று சொல்லுவாள். ஆணினுடைய நண்பர்கள் யாரடா! அந்தப் பெண என்று கேட்டால் 'சும்மாதான்' என்று சொல்லுவான். இருவரும் பழகும் தொடக்கத்திலேயே ஏமாற்றுவதற்குத் திட்டம் போட்டிருக்கின்றார்கள்.

ஆனால், கடைசியில் யார் முதலில் ஏமாற்றுவார் என்று தெரியாததாகிவிடும். ஆனால், என்ன வெளிநாட்டு மாப்பிள்ளைகள் இருக்கின்றார்கள்தானே என்றொரு எண்ணம் இருக்கலாம். அதற்காக வெளிநாட்டு மாப்பிள்ளைகளை குறை சொல்வதற்கில்லை. அவர்கள் அழகான பெண்ணைப் பார்க்கின்றார்கள். அதுதான் ஒரு குறையாகும்.

வாழ்க்கையில் குறைகள்தான் நிறைவுக்கு வருகின்றது. இந்த இடைவெளியில் வாழ்க்கை நகர்வின் வளர்ச்சிக்கு பெண்ணின் பக்கம் குறைவாகத்தான் இருக்கின்றது. இந்த நிறைவும், குறைவும் பெண்ணுக்குச் சாதகமாக உருவாக்கப்படவேண்டும். ஆகவே, எம்மை நாமே வளர்த்துக்கொண்டு, பின்புதான் மற்றவர்களைப் பற்றியும், சமூகம் பற்றிய பார்வை விழவேண்டும்.

- வா

# துக்கத்தை விரட்ட தூங்குங்கள்

முதியவர்களின் பிரச்சினையாக இருந்த நித்திரையின்மை இப்பொழுது இளம் வயதினருக்கும் ஒரு பொதுவான பிரச்சினையாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது.



மனித உடலுக்கு தினமும் எட்டு மணிநேர ஓய்வு மிகமிக அவசியம். எமது உடலிலுள்ள இறுகிய தசைகள் தம்மைத் தளர்த்திக் கொள்ளவும், அறிவுத்திறனுக்கும் இந்த ஓய்வு தேவைப்படுகின்றது. இத்தகைய ஓய்வை நாம் எடுக்க மறுக்கும் போது தான், பல பிரச்சினைகள் எம்முடைய கதவைத் தட்ட ஆரம்பிக்கின்றன. நித்திரை வராமல் தவிப்பவர்கள் அடிக்கடி சொல்லும் வார்த்தை மனம் சரியில்லை என்பதுதான்.

உடலுக்குத் தேவையான ஓய்வைத் தராமல் செயறபடல், சரியான உணவு உண்ணாமல் விடுதல், நெருக்கடி ஏற்பட்டு மன அழுத்தத்துக்கு உள்ளாதல் போன்றவையும், உடலிலுள்ள ஓமோன்களின் வளர்ச்சிக்குத் தேவையான சக்தி கிடைக்காமல் செய்து விடுகின்றது. இதனால், இயற்கையான நித்திரை வராமல் தடுக்கப்படுகின்றது. சிலர் இந்தக் காரணங்களை உணராமல், தூக்க மாத்திரைகளை உபயோகித்து, இயற்கையான உறக்க நிலையை மாற்றி, ஆரோக்கியமற்ற உறக்கத்தை ஏற்படுத்துவதாலும் நித்திரையின்மைக்கு உட்படுகின்றார்கள்.


இதனால் தூக்கம், கலக்கம், உடற்சோர்வு, உடல்வலி, தலைவலி, கண் எரிச்சல், எதிலும் கவனமின்மை, கோபம், எரிச்சல், பசியின்மை, மலச்சிக்கல், சமிபாடின்மை என்று பல பிரச்சினைகள் அறிகுறிகளாகத் தெரியும், இதைக் கவனிக்காமல் விட்டால் நினைவுத்திறனை இழத்தல், நோய் எதிர்ப்புத் திறனில் குறைபாடு, சுவாச இயக்கத்தில் பிரச்சினைகள் என்று ஆரம்பித்து - சிறுநீரகங்களும் பாதிப்படையக் கூடிய நிலை வரலாம்.

இதனைத் தடுப்பதற்கு பின்வரும் சில எளிய வழிகளைப் பின்பற்றுங்கள்.

- சரியான காலநேரத்தைக் குறித்துக் கொண்டு, இரவில் நித்திரைக்குச் செல்லுங்கள். நேரம் தவறாமையுடன் படுக்கைக்குச் செல்வது அவசியம்.
- நேரம் தவறி உணவு உண்பதைத் தவிர்க்கவேண்டும். படுக்கைக்குப் போவதற்கு முன்னர் சமிபாடடையக் கூடிய உணவை அளவோடு உண்ண வேண்டும். உணவு சமிபாடடைதலில் இடையூறு ஏற்பட்டால் கூட நித்திரையின்மை வரும்.
- வாயு சம்பந்தமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் உணவுகளை உண்ணக்கூடாது. குளிர்பானங்கள், உணவைச் சுவையூட்டும் பொருட்களை அதிகமாக உட்கொள்வதைத் தவிர்க்கவேண்டும்.
- படுக்கைக்குப் போவதற்கு முன் - ஒரு கோப்பை இளஞ்சூடான பாலைக் குடித்து வந்தால், அமைதியான நித்திரை ஏற்பட வழி வகுக்கும். பாலிலுள்ள இனிப்பும், கொழுப்பும் நித்திரைக்கு உதவுகிறது.
- நித்திரைக்குப் போவதற்கு முன்னர், சிறு அளவிலான வெந்நீரால் குளியல், கால் பாதங்களைக் கழுவிக் கொள்ளுதல், கண்கள் நெற்றிப் பகுதி, உடலின் பிறபகுதிகளை வெந்நீரில் நனைந்த துணியால் லேசாக ஒத்தடம் கொடுத்தால் நல்ல நித்திரை வரும்.
- மனம் சரியில்லாத நிலையில் உறங்கப் போனால், எண்ணங்கள் சிதறடிக்கப்பட்டு, இரவு முழுவதும் நித்திரை வராமல் இடையூறாக இருக்கும். அதனால். படுக்கைக்குப் போகுமுன் தியானத்தில் ஈடுபட்டு, அமைதியான மனநிலைக்குத் திரும்பிவரவேண்டும். கவலைகளை விரட்ட முயற்சி செய்யவேண்டும். எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி மனநிலையைத் தளர்வாக வைத்திருக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.
- சுத்தமான அறை நன்றாக மூடப்பட்ட வசதியான படுக்கை, படுக்கை அறையில் நல்ல வாசனை - இவையெல்லாம் நல்ல நித்திரைக்கு உதவக்கூடியவை.
- தொடர்ந்து முறையாக உடற்பயிற்சி செய்து வந்தாலும் இயற்கையாகவே நித்திரை ஏற்படும். நித்திரை வரவில்லை என்று நித்திரை மருந்துகளை வாங்கி உட்கொள்வதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். மருத்துவர்களின் ஆலோசனையின்றி மருந்துகள் குடிப்பதை தவிப்பது நல்லது.

◆

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

"காதல் வந்தால் சொல்லியனுப்பு, சீதனம் இருந்தால் வருகிறேன்" இதுதான் உன்னோடு பல்கலைக்கழகத்தில் கற்கும் ஆண் நண்பர்களது "லேற்ரஸ்" பாடல் வரிகள் என எழுதியிருந்தாய்.

நண்பியே இவை நகைச்சுவையாக உனக்குத் தெரியலாம். ஆனால், ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயம். உங்கள் சமூகத்திலே புற்றுநோயாகப் புரையோடிப் போகும் சமூகநோய்களில் இதுவும் ஒன்று.

சீதனம் என்பது சீர்தனம் என்பதன் குறுக்கமே. இதை சீ! தனம் அதாவது, இழிந்தசெல்வம் என்றும் கூறலாம். ஆரம்ப காலத்திலே ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும்போது அவர்கள் எதிர்காலத்தில் சிறப்புடன் வாழவேண்டும் என்பதற்காகப் பெண் வீட்டார் தாம் விரும்பிய செல்வங்களையும், பொருட்களையும் கொடுத்து வந்தார்கள். ஆனால், தற்பொழுது குடா நாட்டுச் சமூகம் இத்தனை இலட்சங்கள் எனப் பேரம்பேசும் நிலையில் உள்ளது. இதற்கான காரணங்கள் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்தாயா?

வாழ்க்கை என்கின்ற நதியில்- சீதனம் என்ற அலைக்கு முகம் கொடுக்க முடியாது, காலம் முழுக்கக் கன்னியர்களாக கண்ணீரில் வாழ்ந்த எத்தனையோ பெண்களைக் கண்டும், உங்கள் சமூகம் ஏனோ இன்னும் திருந்தவில்லை.

சீதனக் கொடுமை, சீதனம் கேட்பது இழுக்கு எனப் பேசிக்கொண்டு இருப்பதிலும், பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருப்பதிலும் எந்தப்பயனுமில்லை.

நண்பியே யதார்த்தமாகச் சிந்தித்தால் சீதனம் என்ற சிலந்தி வலை பின்ன வைப்பவர்களாக எம்மைப்போன்ற பெண்களும் காணப்படுகின்றார்கள் என்பது உண்மை.

சீதனம், சீதனம் எனப் பேசிக்கொண்டு காலம் கழிக்கும் எம்மைப்போன்ற பெண்கள் அதற்கு எதிராக என்னத்தைச் செய்தார்கள்? என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒரு சமூகத்தின் அடித்தளத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமாயின், அது பெண்களிலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். எமது பெண்கள் நினைத்தால் இந்தச் சீதனம் என்ற சமூக நோயை விரட்டலாம்.

நண்பியே உன்னைப் போன்ற பெண்கள் இந்த விடயத்தில் தவறு செய்கின்றீர்கள் என்பது உண்மையே. இன்று சமூகத்தில் உள்ள அனைத்து ஆண்களும் சீதனம் கேட்பவர்கள் அல்ல. அனைத்துக்கும் அப்பால் உள்ளத்தை மட்டும் நேசிக்கும் ஆண்களும் இருக்கின்றார்கள். ஆனால், எமது பெண்களோ கொஞ்சம் படித்தவுடன் தனக்குவரும் கணவர் பட்டதாரியாகவோ, டாக்டராகவோ, பொறியியலாளராகவோ இருக்கவேண்டும் என எண்ணுகின்றார்கள். இந்தநிலை மாறவேண்டும்.

அன்புடன் காலமெல்லாம் சேர்ந்து வாழக்கூடிய கணவன் - பட்டதாரியாகவோ, ஆசிரிய தொழில் பார்ப்பவராகவோ இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. எனவே, பெண்கள் தொழிலையும், அந்தஸ்தையும் எதிர்பார்க்காது - உண்மையும் நேசமும் உள்ள ஒருவர் குடும்பத்தைக் காக்கக்கூடிய பொருளாதார வளத்துடன் வரும்போது ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதாரவளம் என்பது கணவனும்- மனைவியும் வேலைசெய்யும்போது கட்டியெழுப்பப்படும்.

இதற்கு முதற்கட்டமாக நமது பெண்களது உள்ளத்திலுள்ள ஒரு எண்ணக்கரு துடைத்தெறியப்படவேண்டும். அதாவது, தனக்கு வரும் கணவன் கல்வியிலும், அந்தஸ்திலும் தன்னிலும் பார்க்க உயர்ந்தவராக இருக்கவேண்டும் என பெண்களது எண்ணக்கரு மாற்றம் அடையும்போது, சீதனம் என்கின்ற நோய் தானாக நலிவடையும்.

தோழியே ஒரு காலத்திலே - எம்மைப் போன்ற இளம்பெண்களாக இருந்து, இன்று தாய்மார்களாக இருக்கும் பெண்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். குடும்பத்து வறுமை என்பது ஒரு ஆணின் உழைப்பால் தீரவேண்டுமே தவிர, ஆண்மைக்குப் பேசப்படும் விலையினால் அல்ல. இதை இன்றைய தாய்மார்கள் புரிந்துகொண்டால், சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில், சீதனம் என்ற பேச்சை ஒரு திருமணத்தின்போது ஆரம்பிப்பவர் மணமகனின் தாயாகவே இருக்கின்றார். நண்பியே இதுவரை வாய்ச்சொல்லில் வீரராக இருந்த பெண்களுக்கு ஒன்றைக்கூற விரும்புகின்றேன். வார்த்தைகளால் வர்ணித்துக் கொண்டிருப்பதை விடுத்து செயலில் இறங்குங்கள். வெற்றி நிச்சயம்.

அன்புள்ள சிநேகிதி
லெஸ்லினா

# பிஞ்சுமுகத்தின் தேடல்

இன்று நடந்த சம்பவம் என்னை உலுக்கி விட்டது. இனிமேல் எப்படி எனது வாழ்க்கை கழியப் போகிறது? என்ற நினைவில் வலியின் வடு. அதை எப்படிக் குணமாக்குவது? என் வாழ்க்கையில் நடந்த அந்தச் சம்பவம்! நினைவுச் சங்கிலிகள் பிணைய நான் அவற்றில் இணைந்து கொண்டேன் என் அப்பா! என் அம்மா! இருவரையும் நான் உணர்ந்து கொண்ட போது எனக்கு வயது வந்து விட்டது.

அம்மாவைப் பற்றி ஊரார் பேசிக்கொள்வதும் புரியத் தொடங்கியது என்னுடைய அப்பா ஒரு கோயிற் பூசகர். ஆனால், அவருக்கு ஏற்கனவே திருமணமாகியிருந்தது. குழந்தைகளும் இருந்தார்கள். அப்படியென்றால்.. அம்மா அவரை முறையாகத் திருமணம் செய்யவில்லை என்பதை நான் தெளிவாக அறிந்து கொண்டபோது, எனக்கு அவளில் வெறுப்பே தோன்றியது.

என்னுடைய அப்பாவின் குழந்தைகளின் பெயரை நான் அறியேன். ஆனால், அவர் நோயுற்றுக் காலமானபோது அறிந்து கொண்டேன். அம்மா அப்பாவின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவில்லை. அவள் கலந்து கொள்ளும் உரிமையும் இல்லையாம். எனக்குத் திருமண நடைமுறைகள் பற்றிய தெளிவு அப்போதிருக்கவில்லை.

அப்பாவின் மறைவுக்குப் பின்னர் அம்மாவின் உறவினர்கள் அவளை அணைத்துக் கொண்டார்கள். அம்மாவையும் என்னையும் காப்பாற்ற அவர்களால் முடியவில்லை. எனவே அம்மா தன்கையே தனக்குதவியென்று ஒரு சிறுகடை நடத்தமுற்பட்டாள்.

அவளுக்குத்துணை செய்ய ஒரு நண்பர் கிடைத்தார். எனக்கு முதல் பார்வையிலேயே அவரைப் பிடிக்கவில்லை. அவருடைய பார்வையும், சிரிப்பும், பேச்சும் எனக்கு ... ஏதோ பயமாக இருந்தது. நான் பூப்படைந்திருந்ததால் அதை உணரமுடிந்தது. ஆனால் அம்மாவின் போக்கோ மாறுபட்டதாய் இருந்தது. அவரை முற்றாக நம்பினாள். அந்த நம்பிக்கை அவரைத் தன்னுடைய இரண்டாவது கணவராக ஏற்கவும் துணை நின்றது. அம்மாவினுடைய செய்கை அவள் உறவினருக்கு வெறுப்பைத் தர அவர்கள் முற்றாக விலகிக்கொண்டார்கள்.

அம்மா தனிமரமாக நின்றாள். அவளை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தனது இரண்டாவது வாழ்க்கைத் துணையை அவள் முற்றாக நம்பினாள். தனது சிறு கடையை நடத்தும் பொறுப்பை அவரிடம் கையளித்து நிம்மதியாக இருந்தாள். ஆனால்...

அம்மா என்னை அவரை அப்பா என்று அழைக்கும் படி சொல்ல நான் மறுக்க ... எனக்கும் அம்மாவுக்குமிடையே இடைவெளி தோன்றியது.


எனது பள்ளிப் படிப்பில் அம்மாவின் கணவருக்கு அக்கறை இருக்கவில்லை. அடிக்கடி எதாவது சாட்டுச் சொல்லி நான் பாடசாலைக்குப் போகாமல் தடுத்துவிடுவார். அம்மாவும் அதை எதிர்ப்பதில்லை. நான் எனது படிப்புப் பாழாகிறதே என வேதனைப்பட்டேன்.

பாடசாலை செல்லும் சாட்டில் என் உறவினரைச் சந்தித்துப் பேசி வந்தேன். எனது பெரியம்மாவிடம் அம்மாவைப்பற்றி சொல்லியிருந்தேன். ஆனால் பெரியம்மா ஒன்றுமே சொல்லமாட்டா. ஒரு நாள் பெரியம்மாவை பாடசாலையால் வரும்போது வழியில் கண்டேன். அவ என்னை சரசு என்று கூப்பிட்டா. நானும் அவாவுக்கு அருகில் போய்நின்றேன். அவ சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, பிள்ளை அவனோடை கொஞ்சம் விழிப்பாயிருந்து கொள்! அவளுடைய் குரலில் இருந்த பதட்டம் எனக்கு வியப்பாயிருந்தது.

சரி பெரியம்மா! என்று நான் சொல்லித் திரும்ப என் அம்மாவின் கணவர் சைக்கிளில் எதிரே வந்து கொண்டிருந்தார். அவருடைய பார்வையில் ஒரு வக்கிரம் தென்பட்டது. என் நெஞ்சிலும் அச்சம் குடிகொண்டது.

மறுநாள் இரவு முழுவதும் அம்மாவும், அவள் கணவரும் வாக்குவாதப்பட்டார்கள். அம்மாவை அவர் கொடூரமாகத் தாக்கியதைக் கேட்ட சத்தங்கள் மூலம் நான் உணர்ந்து கொண்டேன். பொழுது விடிந்தபோது அம்மாவைப் பார்த்தேன். அவள் முகமெங்கும் கீறல் காயங்கள்... அவள் இரவு முழுவதும் அழுததைக் கண்கள் காட்டின. எனக்கு அம்மாவைப் பார்க்கப் பாவமாயிருந்தது. அவள் எனக்கு ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால் ஒன்றும் பேசாமல் கிணற்றடிப் பக்கம் போனாள். நான் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் தோற்றம், இப்போது வெகுவாக மாறியிருந்தது.

அப்பா இருந்தபோது அவள் புடவை தான் கட்டுவாள். அவள் சீலைத் தொங்கலைப் பிடித்து நான் ஊஞ்சலாடியது இன்னும் நினைவில் இருக்கிறது. நெற்றியில் விபூதியும், பொட்டும் பூவுமாக பராசக்தி என்ற பேருக்கேற்ற தோற்றப் பொலிவு. ஆனால், இப்போது கவுண் அணிகிறாள். பூ வைப்பதில்லை. பொட்டுமில்லை. அப்பாவின் மறைவை மனதிலே இருத்தி வைத்திருக்கிறாளோ என நினைத்தேன். நான் பாடசாலைக்குச் செல்ல என்னுடைய வெள்ளைச் சீருடையை எடுப்பதற்காக அறைக்குள் சென்றேன். தூரத்தே அம்மா கிணற்றடியில் குளிப்பது ஜன்னலூடாகத் தெரிந்தது.



நான் சீருடையைக் கொடியிலிருந்து எடுக்க, என் இடுப்பை இரு கரங்கள் மெல்லப் பின்புறமாகப் பற்றுவது எனக்குத் தெரிந்தது.

என் மூளையில் பளீரென்று பெரியம்மா அன்று சொன்னது - மின்னல் போலத் தாக்க, நான் அந்தக் கரங்களை உதறிவிட்டுத் தலை தெறிக்க அறையிலிருந்து வெளியே ஓடி வந்து வீட்டின் முன் உள்ள கடையைக் கடந்து தெருவில் இறங்கி ஓடினேன்.

நெஞ்சு பயத்தால் உறைய கையொழுங்கையில் இறங்கிப் பெரியம்மா வீட்டுத் தகரப்படலையைப் படபடவென்று பலங்கொண்டமட்டும் தட்டினேன். பெரியம்மா ஓடிவந்து திறந்துவிட்டு, படலையை மீண்டும் உள்ளே பூட்டி விட்டா. என்னைத் கைத்தாங்கலாக வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றா.

நான் அவவின் மடியில் விழுந்து ஓவென்று பெருங்குரலில் அழுதேன். பெரியம்மா ஆறுதல் சொல்லவும் என்மனம் அடங்கவில்லை. நான் அங்கே போகமாட்டேன்.... அவன்.... அவன் என்று மேலே சொல்ல முடியாமல் விம்மத்தான் முடிந்தது.

பெரியம்மா தன்னோடு என்னை இரண்டு நாட்கள் வைத்திருந்தா. இடையில் என்னைத் தேடி அம்மா வந்தபோது பெரியம்மா நான் அங்கு வரவில்லை என அம்மாவிடம் பொய் சொல்லி அனுப்பியது, மட்டுமல்ல அம்மாவிடம் இனிமேல் என்ரை வாசல் மிதியாதையடி......! என்றும் ஏசிவிட்டாள்.

அந்தச் சொல் அம்மாவைத் தலைகுனிய வைக்க அம்மா ஒன்றும் சொல்லாமல் போய் விட்டாள். நான் எல்லாவற்றையும் வீட்டுக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மாவை இனிமேல் சந்திப்பதில்லை என்ற முடிவை அப்போது எடுத்து விட்டேன். பெரியம்மா என்னை அன்றே அழைத்துக் கொண்டு இல்லத்திற்கு வந்தாள்.

தாய் தந்தையை இழந்த சிறாருக்கு ஆதரவு தரும் அந்த இல்லம் என்னையும் ஏற்றுக் கொண்டபோது, நான் புதிய உலகினுள் புகுந்தேன்.

பெரியம்மா, இல்லத்தில் என்னைச் சேர்க்க எல்லாக் கதைகளையும் இல்லப் பொறுப்பாளரிடம் சொன்னார்.

ஆனால் இல்லப் பொறுப்பாளர் தற்துணிவுடன் என்னைச் சேர்க்க முயன்று நிர்வாகிகள் அனைவருக்கும் என் நிலையை விளக்கியபோது எல்லோரும் என்னை ஏற்க இசைந்தனர். அப்போது நான் ஒன்றை உணர்ந்து கொண்டேன்.

என்னைப் போன்றவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை ஆண்கள் உணரவில்லை. ஆனால், தாயுள்ளம் கொண்ட எவரும் அதை உடனே உணர்வர்.

என வாழ்வில் என்னை நானே காத்துக் கொள்ள வேண்டும் என உறுதிபூண்டேன். என் புதிய உலக வாழ்வை முழு மனநிறைவோடு ஏற்றாலும் என் உள்ளத்தின் ஒரு மூலையில் அம்மா எங்கே இருக்கிறாள் என்ற கேள்வி முளைத்திருக்கிறது.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# குழந்தையின் கற்பனைத் திறனை வளர்க்க

பொதுவாகவே குழந்தைகளிடம் கற்பனை வளம் அதிகம். பெரியவர்களான எமக்குத் தான் கற்பனை வளமே இருக்காது. நிலவில் பாட்டி வடை சுடுவதிலிருந்து - மேகங்களில் பலவகை உருவங்கள் தெரிவது வரை குழந்தைகளுக்கு பல கற்பனைகள் இயற்கையாகவே தோன்றுகின்றன. அப்படியாகக் கற்பனைகளைத் தூண்டிவிடுவதன் மூலம், குழந்தையின் கற்பனை வளத்தை வளர்த்துவிடவேண்டும்.



இதன்மூலம் சிறுவயதிலிருந்தே அவர்களுக்கும் இயற்கைக்குமான தொடர்பைப் பேணமுடியும். மேகத்தைச் சுட்டிக்காட்டி, இந்த மேகத்தைப் பார்த்தால் என்ன உருவம் மாதிரித் தென்படுகின்றது என்று கேட்டுப்பாருங்கள். யானை மாதிரி, குதிரை மாதிரி, பூனை மாதிரி என்று பதில் சொல்வார்கள். இதைவிட மிருகங்க்ளின், பறவைகளின் அழகிய பூக்களின், ஓவியங்கள், படங்களைக் காட்டி விளக்கங்களைக் கொடுக்க முயலுங்கள்.

அதேபோல் சுவரில் தீட்டிய வர்ணப்பூச்சுக்கள் அழிந்திருக்கும்போது, புதிய வடிவங்களாக புலப்படலாம். அவற்றை என்ன மாதிரி தெரிகின்றது என்று கேட்டுப் பாருங்கள். தனக்குத் தெரிந்த உருவத்தை, தனது கற்பனைத் திறனின் மூலம் பதில் சொல்லத் தயங்கமாட்டார்கள்.

படங்களுடன் கூடிய கதைப் புத்தகங்களைக் காட்டி, கதைகளைச் சொல்லிக் கொடுங்கள். அதைவிட உண்மைச் சம்பவங்களைக் கதைகளாகவும், கற்பனைக் கதைகளையும் கூறலாம். நீங்கள் சொல்லிக்கொடுத்தபின் அவர்களைக் கதை சொல்லச் சொல்லுங்கள். அவர்கள் விரும்பியபடி சொல்வதற்கு அனுமதியுங்கள். அதுதான் முக்கியம்.

சில நேரங்களில் கதை சொல்லிக்கொண்டே போவார்கள். இடையில் நிறுத்திவிட்டு யோசிப்பார்கள். அப்படியான சமயத்தில் அவர்களைக் குழப்பாமல், அவர்களை ஊக்குவிப்பதுபோல் கதையுங்கள். சிறிய சொற்தொடர்களைப் பயன்படுத்துங்கள். இதன்மூலம் அவர்களது மொழி ஆர்வம் வளர வழிவகுக்கும்.

பென்சில், பேப்பர், வர்ணப் பென்சில்களைக் கொடுத்து, படம் வரைய விடுங்கள். அவர்களின் கற்பனையில் படம் வரைவார்கள். நிறங்களின் பரிச்சயம் அவர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு. புதிய புதிய சத்தங்களை, விநோதமான குரலில் எழுப்பிக் காட்டலாம்.

இவ்வாறாக குழந்தைகளுடன் பொழுதைப் போக்குவது, உரையாடுவதன் மூலம் அவர்களின் கற்பனைத் திறனை வெளிக்கொண்டுவர முடிகின்றது.

# பெண்களுக்கான உணர்வுகள் யாவும் புறக்கணிக்கப்படுவதேன்?

**தொ**ழில் பார்க்க வெளியே வரும் பெண்கள் சில பிரச்சினைகளை எதிர் கொண்டாலும், பொருளாதாரப் பலமும், வாழ்வு பற்றிய உறுதியான நம்பிக்கையும் அவர்களுக்கு உடன்பாடான பலமாக உள்ளது.

அதேநேரம், வீட்டுப் பொறுப்பு வகிக்கும் பெண்கள் வெவ்வேறுபட்ட காலங்களில் வெவ்வேறான சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிவர்களாகின்றனர்.



பெற்றோர் தமது பெண்பிள்ளைக்கு எப்படியும் ஒரு திருமணத்தைச் செய்து கொடுத்து விட்டால், அத்துடன் தமது பொறுப்பு முடிந்தது என நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

ஆனால், ஒரு இளம் பெண் - தாயாக, குடும்ப நிர்வாகியாக விளங்கும்போது, கணவனால் எல்லாப் பொறுப்புக்களும் இவள் மீது சுமத்தப்படுகின்றது. பிள்ளைகளை ஓய்வுநேரத்தில் கவனிப்பது மற்றும் இதர வேலைகளை இவளே செய்கின்றாள்.

அவளுக்கான ஓய்வு, எண்ணம், உணர்வுகள் என்பன முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றது. அவள் தனது பல கனவுகளைக் கலைத்தவளாகவே காணப்படுகின்றாள்.

இந்த நிலையில் கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வு குறைகின்றது. பிள்ளைகளின் பராமரிப்பு தொடர்பாக சண்டை சச்சரவு எழுகின்றது. அதிலிருந்து ஏன் திருமணம் செய்தோம் என எண்ணக்கூடிய நிலைக்குக்கூட இட்டுச் செல்லப்படலாம்.

தனியே வீட்டுப் பராமரிப்பு மனைவிக்கு மட்டும் உரியது எனக் கூறிவிட முடியாது. என்றாலும், ஒப்பீட்டுரீதியில் தொழிலில் இருப்பவர் குறைந்தது அலுவலகத்திலேனும் தமது பகிர்தலைச் செய்யமுடியும்.

அவ்வித சந்தர்ப்பம் வீட்டிலிருப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. சரியாகத் தமது உணர்வைப் பகிர்ந்துகொள்ள ஆரோக்கியமான உரையாடல்களைத் தொடர இருபுறமும் ஒரேவிதமான எணணம் சிந்தனை இருப்பது சிறந்தது.


இல்லாவிடின், அப்படி ஒரு சூழலை ஏற்படுத்திக்கொள்வது நல்லது. ஒரே விடயங்களைப் பேச, கலந்துரையாடக் கூடிய சூழ்நிலை ஆரோக்கியமான உரையாடலைத் தோற்றுவிக்கும், தொடரச் செய்யும். இது மெல்ல மெல்ல இருவரிடையே நல்ல புரிந்துணர்வை உண்டாக்க உதவும்.

இத்தகைய சூழல் மன அமைதிக்கும், உடல் ஆரோக்கியத்துக்கும் வழி வகுக்கும். மொத்தத்தில் மன நலனுக்கும், வலுவூட்டலுக்கும் ஆரோக்கியமான புரிந்துணர்வுடன் கூடிய கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும் தேவையானது எனலாம்.

**- வாசுகி**

அழியாத வடுவாக ஆடி - 09

இ. விஜேந்திரன்



# சிங்களப்பேரினவாதத்தின் கொடியமுகத்தை உலகுக்கு உணர்த்திய இரத்தநாள்

ஆண்டவன் பாதங்களில் இருந்தவர்கள் அநியாயமாக கொல்லப்பட்ட ஆடி 9ஆம் திகதி மறக்க முடியாத துயரநாளாக நவாலி மக்களின் மனங்களில் பதிந்துள்ளது. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் ஆட்சிக்கால ஆரம்பத்தில் அரங்கேறிய இன அழிப்பின் மிலேச்சத்தனமான கொடூர நிகழ்வென்றால் 09-07-1995ஆம் ஆண்டில் நவாலி சென். பீற்றர் தேவாலயம், சின்னக் கதிர்காமர் முருகன் ஆலயம் என்பன சேதத்திற்குள்ளயின விமானத் தாக்குதல். இன்றைக்கு ஒன்பது வருடங்களிற்கு முன்னர். 147 அப்பாவிப் பொதுமக்களைப் பலிகொண்டு 350 இற்கு மேற்பட்டவர்களை காயப்படுத்தி கோரத்தாண்டவமாடிய இந்த நிகழ்வு அம்மையாரின் ஆட்சியில் இரத்தக்கறை படிந்த வரலாறாக இடம் பிடித்துள்ளது.

வலி.தெற்கு, வலி.தென்மேற்குப் பிரதேசங்களை இலக்கு வைத்து இலங்கை இராணுவத்தினர் ஒப்பிரேசன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இதற்கு உதவியாக பலாலி, அளவெட்டி இராணுவ நிலைகளில் இருந்து சர மாரியாக எறிகணைத் தாக்குதல் கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால், மக்கள் இடம் பெயர்ந்து சென். பீற்றர் தேவாலயத்திலும், சின்னக் கதிர்காமர் முருகன் ஆலயத்திலும் தஞ்சம் புகுந்து ஆறுதலடைந்தனர்.

நவாலிப் பகுதி மக்களால் இவர்களுக்கு சமைத்த உணவு மற்றம் உதவிகள் வழங்கப்பட்டன. அல்லற்பட்டு, வந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்து ஆறுதல்படுத்தினர் நவாலி மக்கள். இதனை பொறுக்க முடியாத இலங்கை இராணுவத்தின் வான் படையினர் 09-07-1995 ஆம் ஆண்டு மாலை 5.30 மணிக்கு கண்மூடித்தனமான விமானத்தாக்கு தலை மேற்கொண்டனர். சின்னக் கதிர்காமர் ஆலயத்தில் 13 குண்டுகளை தொடராக வீசி 147 பேரைப்பலி கொண்டதுடன், 350 இற்கும் மேற்பட்டவர்களுக்கு அழியாத வடுக்களை ஏற்படுத்தியது இந்தச் சம்பவம்.

இந்த விமானக் குண்டுத் தாக்குதலில் இரண்டு கிராமசேவையாளர்கள். உட்பட மாணவர்கள், சிறுவர்கள், பொதுப் பணியாளர்கள், பொதுமக்கள் என வர்க்க வேறுபாடின்றி அங்க அவயவங்கள் இழந்து துடிதுடித்து உயிர் இழந்தனர். மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, மாதகல், சில்லாலை, பண்டத்த ரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இரத்தக்கறை படிந்த இந்த துயர நிகழ்வில் விலை மதிக்க முடியாத மனித உயிர்களுடன் , கால்நடைகள், பல பயன்தரு மரங்கள், ஆலயங்கள் இரண்டு, பாடசாலை, பதின்நான்கு வீடுகள், மூன்று கடைகளும் சேதத்துக்கு உள்ளாகப்பட்டன.

உடைந்த கோயில் கதவுகளில் வைத்து இறந்தவர்களின் உடல்களை தூக்கியமையும், சதைத் துண்டங்களை சாக்குகளில் அள்ளியமையும், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய உடல்களை நான்கு நாட்களுக்கு பின் எடுத்தமையும், இறந்தவர்களின் உடல்களை கட்டிலில் வைத்து கால்நடையாக யாழ். நகர் நோக்கிக்கொண்டு வந்தமையும், இன்னமும் இந்தப்பகுதி மக்களின் மனக்கண்முன் காட்சியளிக்கின்றன.

இந்த விமானத் தாக்குதல்களில் உறவுகளைப் பறிகொடுத்தவர்கள் எம்முடன் பகிர்ந்து கொண்டவற்றை வாசகர்களுக்காக தருகிறோம்.

செல்வி இராதுரை - சுமதி (வயது 21)



தனது குடும்பத்தினரை இழந்த சோகத்துடன் அப்பா -இராசதுரை (வயது 35) இடம் பெயர்ந்து வந்தவர்களிற்கு கஞ்சி கொடுத்துக் கொண்டிருந்தவர் அம்மாவுடன் திருமதி மங்களேஸ்வரி இராசதுரை (வயது 33) நானும் இரு சகோதரர்களும் சந்திரகாந்த் (வயது 12), சுதா (வயது 11) உறவினர்களைப் பார்க்கப்போன போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. இதில் எனது குடும்பம் அழிந்ததுடன் நானும் தலையில் காயமடைந்தேன். நிகழ்வை என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. எனக்கு ஏற்பட்ட பரிதாப நிலை இனி யாருக்கும் ஏற்படக்கூடாது. மாமியின் அரவணைப்பில் உறவினர்களது பாதுகாப்புடனும் இருக்கின்றேன். இந்தத் துயர நிகழ்வால் எனது கல்வியையும் சிறுவயதில் இடைநிறுத்திக் கொண்டேன்.

திருமதி கமலா - அன்ரனிகுறூஸ் (வயது 52).



18 வயது மகளை இழந்த துயரத்துடன் (செல்வி - அ.அமுதினி - மானிப்பாய் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

9ஆம் திகதி காலை ஒரே வெடிச் சத்தமாக இருந்தது. அப்ப நாங்கள் கலியாண வீட்டிற்கு சமைத்துக் கொண்டிருந்தம். எங்களுக்கு மகளும் உதவிகள் செய்தா. கோயில்ல நிறைய ஆட்கள் வந்திருக்கினம் என்று வந்து சொன்னார்கள். நான் கோயிலில் ஒரு அமைப்பில் இருந்தமையால் சமையலை விட்டிட்டு கோயிலுக்கு வந்து கோயில்ல இருந்தவர்களுக்கு பாண் வாங்கிக் கொடுத்ததுடன், குழந்தைகளுடன் வந்த தாய்மார்களுக்கு பால்மாவும் கொடுத்தோம். அவர்களை பள்ளிக் கூடத்தில் இருத்திப்போட்டு சமைக்கும்போது தான் இந்தக் கொடூரம் நடந்தது.

மகளும் வந்து எங்களுடன் நிக்கேக்க விமான இரைச்சலுடன் எல்லோரும் விழுந்து படுங்கோ என்று சத்தம் கேட்டது. பாரிய சத்தத்துடன் குண்டுகள் வெடித்து பெரும் புகை மூட்டம் கோயில் வளவை மூடியது. ஒரே கூக்குரலாக இருந்ததுடன் சனங்கள் எல்லாம் நாலா பக்கமும் ஓட வெளிக்கிட்டாங்க. எனக்கு என்ன நடக்குதென்று நினைச்சுப் பார்க்ககூட முடியேல்ல இருந்தும் படுகாய மடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கு உதவிகளை செய்தோம். திரும்பிற திரும்பிற இடமெல்லாம் தலை, கை, கால், இல்லாமல் கிடக்கும் உடல்களையும் சதைத் துண்டங்களை தான் காணமுடிந்தது. ஒரு ஒழுங்கேக்க எனது கணவர் பிள்ளையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தார். என்னால என்ர பிள்ளையைப் பார்க்க முடியேல்ல அந்த அவலத்தை தான் என்ன வென்று சொல்கிறது. இரவு 8 மணிக்கு கட்டிலில் பிள்ளையை வைத்து கால் நடையாக யாழ். நகர் நோக்கி இடம் பெயர்ந்தோம்.

தங்கராசா - விஜயகுமார் (பூவா) (வயது -26)

நண்பர்கள், உறவுகளை இழந்த நினைவுகளுடன்.

வந்த ஆட்களுக்கு சாப்பாடுகளைக் கொடுத்துவிட்டு, கடைக்கு முன்னால் இருந்து கதைத்துக் கொண்டு இருந்தனாங்கள். புக்காறா சத்தம் கேக்க மோகினி அண்ண சொன்னார் நோட்டீஸ் போற்றாங்கள் என்று. பிறகு குண்டடிக்கிறாங்கள் படுங்கோ என்று சொல்ல, என்னு டன் இருந்தவர்கள் ஓடினார்கள். அவர்கள் அப்படியே சரி. நான் செருப்பை எடுக்க குனிஞ்ச நான் அப்ப எனக்கு பக்கத்தில நிண்ட நண்பனும் அதிலயே சரி அதில ஆறு பேர் இறந்திட்டாங்கள்.



எங்கட அன்ரீன்ர மகனையும் (வயது 10) நரேஸ் இழந்திட்டம் நரே சின்ர தங்கச்சியைக் காணேல்ல எண்டு தேடினால் இரண்டு நாட்களின் பின் தங்கச்சியின்ர தலையையும், உடலின் ஒரு பகுதியையும் பிரிந்தினி (வயது 4) எடுத்து எமது வளவில் வைத்தே அதை எரிச்சனாங்கள். பின்னர் ஊருக்கு வரும் போதெல்லாம் விமான இரச்சலும் அழுகுரல்களுமே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அந்தக் கணத்தில் செய்தியாளராக நின்ற செல்வராஜா ரமேஸ் தனது சகோதரியை பறிகொடுத்ததையும் விபரிக்கின்றார்.

பெரும் புகை மூட்டத்தின் மத்தியில் இருந்து அபயக் குரல்கள் கேட்ட வண்ணமே இருந்தது. உடல் சிதறிப் பலியானோர் பரவலாகக் கிடப்பதனையும், அவயங்கள் இழந்து படுகாயமடைந்தோரின் பரிதாப நிலையும் அவலத்திற்குரியது.



குழந்தையுடன் இருந்த தாய் இறந்து கிடக்க அருகில் குழந்தை அழுது கொண்டு இருந்தமையும் கண்முன்னே இன்றும் உள்ளது. எனது சகோதரி (செல்வி ஹேமலதா - செல்வராஜா j/134 கிராமசேவையாளர்) யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இடப்பெயர்வு தொடர்பான பதிவுகளை மேற்கொண்டபோது தாக்குதலில் அகப்பட்டு முருகன் கோவில் முன்றலில் இறந்து கிடந்தா.

விமானத் தாக்குதலினால் பாதிப் படைந்தவர்களில் 50% மாணவர்கள் இதுவரை எதுவித நிவாரண உதவிகளையும் பெறவில்லை. இற ந்தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையும் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் உரிய ஆவணங்களை உரிய காலத்தில்பெற முடியாமையே காரணம் என்று கூறினாலும், இதனை முழுமையாக ஏற்க முடியாது. 1997 ஆம் ஆண்டு நடமாடும் இடம் பெயர் சேவை பதிவுகள் மேற்கொண்ட போதிலும், இதுவரை எதுவித உதவிகளும் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடை க்கவில்லை.

பாவிலுப்பிள்ளை - மரியநாயகம் - (வயது 53)

சகோதரி, மருமக்களை இழந்த துயரத்துடன்.

நாங்கள் எல்லோருமாக சமைத்துச் சாப்பாடுகொடுத்துக் கொண்டு இருந்தனாங்க. றோட்டில வைச்சு



தண்ணி கொடுத்தவை, பெரிய சத்தம் கேட்டது. உடன குண்டு போட்டிட்டான் என்று எல்லோரும் படுத் தனாங்கள் தான். எனக்குப் பக்கத்தில் சோறு துளாவிக் கொண்டிருந்தவர் அப்படியே அகப்பையுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அங்கால றோட்டுப் பக்கம் போனா ஒரேசிதைந்த நிலையில் இறந்த உடல்களும், காயப்பட்டு கதறி உதவிக்குரல் எழுப்புபவர்களும் தான். தண்ணீ, தண்ணீ என்ற சத்தத்துடன் துடிதுடித்து இறந்தவர்களின் பரிதாப நிலை இன்னும் நினைவில் உள்ளது.

இடம்பெயர்ந்து போய் ஒரு கிழமையால் திரும்பி வரேக்க, குண்டடிச்ச புக்காறாவை சுட்டு வீழ்த்தி கோயில் வளவில் கொண்டு வந்து வைத்தார்கள். இந்தச் சம்பவம் எங்களுக்கு ஆறுதலாக அமைந்ததென்றே கூற வேண்டும். எங்களுக்கு, எங்கட பிள்ளைகளுக்கு எமனாக வந்தவன் கிடக்கும் நிலையைப் பார்த்து சந்தோசப்பட்டோம். மச்சாளின்ர மகனின் உடலைத் தூக்கிக் கொண்டு றோட்டிற்குவர எனது சகோதரி றோட்டில் இறந்து கிடந்தா. இப்படியான அவலம் இனி மேலும் எங்களுக்கு வரக்கூடாது. ஆடி 9ஆம் திகதி இந்தப் பகுதி மக்களை ஆட்டம் காண வைத்தது என்றே கூறவேண்டும்.

இறந்தவர்களின் உடல்களுடன் இடம் பெயர்ந்து சென்ற துயர நிகழ்வு இடம்பெற்று இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவடைகின்றன. அம்மையாரின் ஆட்சியில் நிறையவே அலங்கோலங்கள் இடம் பெற்ற போதிலும் இதுவரை பாதிக்கப் பட்டவர்களுக்கு (முழுமையாக) நஷ்டஈடோ ஆலய புனரமைப்புக்கான செயற்பாடுகளோ இடம் பெற்றதாக தெரியவில்லை. ஏன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் முன்வரவில்லை. இழப்பீடுகள் மூலமாக இறந்தவர்கள் உயிர் பெறுவதில்லை. இருந்த போதிலும் அவர்களின் துயரத்தில் பங்கு கொள்வதால் அவர்களுக்கு ஒருவித ஆறுதலாக அமையும்.

சென். பீற்றர் வளாக வீதியில் உயிர் இழந்த 147 பேரிற்கும் நினைவு தூபி அமைக்கப்பட்டுள் ளது. அதே போல் நவாலி வடக்கு புலவர் வீதியிலும் நினைவு தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன . தேவா லயத்தின் வாகைமரத்தில் வேலி அடைத்த தகரம் தாக்குதலின் எதி ரொலியாக இன்னமும் தொங்கிக் கொண்டிருக்கின்றமையே இந்த தாக்குதலின் வேகத்திற்கும், அழிவுகளுக்கும் தக்கசான்றாக அமைகின்றது.

# 147 பேரை ஸ்தலத்தில் பலியெடுத்த நவாலி படுகொலையின் தாண்டவம்

நவாலியூர் - செல்வராஜா ரமேஷ்

09-07-1995 தமிழர் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த ஒரு கோரமான கொடிய நாள்.

அன்று தான் நவாலி சென். பீற்றர்ஸ் மற்றும் நவாலி முருகமூர்த்தி ஆலயம் அழிந்து, அப்பாவியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்களை சாவு கொண்ட நாள்.

தற்போதைய ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்கவின் பணிப்புரையின் பேரில் வலிகாமம் ஷெல், ரொக்கட் தாக்குதலில் அதிர்ந்து கொண்டிருந்த வேளையில் விமானப்படையினால். ஆடப்பட்ட ஓர் இனப்படுகொலையாகும்.

வரலாற்றில் இந்த இரத்தக் கறை படிந்த நாட்களை, நிகழ்வுகளை மறக்க முடியாது. தமிழினம் மறக்காது. அன்றைய நிகழ்வை ஒட்டி லண்டன் பி.பி.சி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

முன்னேறிப் பாய்தல் என பெயர் கொண்ட 'லீப்போர்வேர்ட்' இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் தொடங்கிய இராணுவத்தி னர் பலாலியில் இருந்தும், அளவெட்டியிலிருந்தும் மிகக் கொடூரமான முறையில் ஷெல் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும், குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர்.

திடீரென 09-07-1995 அன்று வலிகாமம் தென்மேற்கு, வலி மேற்கு, வலி.தெற்கு, வலி.வடக்குப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், அரச மற்றும் பொது நிறுவனங்களை நோக்கி காலை 5.20 மணியிலிருந்து விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் தாறுமாறாக பாரிய சத்தங்களுடன் நடாத்தப்பட்டன.

அன்றைய தினம் காலை வலிகாமம் பகுதியிலுள்ள மக்கள் உடுத்த உடுபுடவைகளுடன் கையில் அகப்பட்ட பொருட்களுடன் கண்ணீரும் கம்பலையுமாக வெளியேறிய காட்சிகள் இன்றும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக தமிழர் மனதில் வடுவாக பதிந்துள்ளது.

கால்நடையாகவும், சைக்கிள்களிலும், தள்ளுவண்டில்களிலும், மாட்டு வண்டில்கள் மூலமாகவும், வழுக்கையாறுவெளி, நவாலி ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை - மானிப்பாய் பிரதான வீதி வழியாக கைக் குழந்தைகள், வயோதிபர்கள், முற்றாக எழுந்து நடக்க முடியாதவர்கள் என பலரும் பல இன்னல்களை சுமந்த வண்ணம் சென்றனர்.

அவ்வேளையில் சகல வீதிகளிலும் ஹெலிக்கொப்டர் தாக்குதல், அகோரமான ஷெல் தாக்குதல்களினால் வீதிக்கு வீதி காயப்பட்டவர்கள், இறந்தவர்கள், காயமடைந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வாகனங்களும் இல்லை.

வாகனங்களை இயக்குவதற்கான எரிபொருட்களும் அற்ற பொருளாதார தடையான மந்தமான காலப் பகுதி யாகும்.

இதேநேரம் காயமடைந்தவர்களை ஏதோ ஒரு வழியின் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டால், அவர்களை காப்பாற்ற மருந்தகங்களோ வைத்திசாலைகளோ இயங்கமுடியாத அவலநிலை.

இறுதியில் காயமடைந்தவர்கள் சிகிச்சையின்றி இறந்த நிகழ்வுகளையும் மறக்க முடியாது!

அன்றையதினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளினூடாக நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமர் முருகன் ஆலயத்திலும் தாகம் தீர்ப்பதற்காக அமர்ந்து களைப்பாறினர்.

அவ்வேளையில் யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்தவேளை, விமான மூலம் 13 குண்டுகள் தொடர்ச்சியாக மேற்படி இரு ஆலயங்கள் மீதும் வீசப்பட்டன.

அவ்வளவுதான்!

நவாலிக்கிராமம் ஒருகணம் அதிர்ந்து வீதிகள் தடைப்பட்டு, மரங்கள் முறிந்து வீழ்ந்து, வீடுகள் தரைமட்டமாகி, மதில்கள் வீழ்ந்து பாரிய புகை மூட்டம் காணப்பட்டது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயமும், நவாலி சின்னக்கதிர்காமர் முருகன் ஆலயமும் மாலை 5.45 மணியளவில் இடம் பெற்ற தாக்குதலில் அதிர்ந்தன.

சுமார் 147 பேர் அந்த இடத்திலேயே குடாநாட்டின் பல்வேறு இடத்தை சேர்ந்தவர்கள் பலியானார்கள்.

இந்த நிகழ்வில் இக்கொடூரச் சாவானது கையிழந்து, காலிழந்து, தலையிழந்து, உடல்சிதறி குற்றுயிராகக் கிடந்த நிகழ்வுகளை எம்மால் மறந்துவிடமுடியாது.

சுமார் 360 இற்றும் மேற்பட்டோர் காயமடைந்து சிகிச்சை அளிக்காத நிலையில் நீண்ட நேரம் இரத்தம் சிந்தி பலர் உயிர் இழந்ததை காணக் கூடியாதாக இருந்தது. அன்றைய தாக்குதலில் பொதுமக்கள் சேவையில் நேரடியாகப் பங்கு கொண்ட வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களான நவாலி வடக்குப் பிரிவு அலுவலரும், சில்லாலைப் பிரிவு கிராம அலுவலரான பிலிப்புப்பிள்ளை கபிரியேல் பிள்ளை அவர்களும் ஸ்தலத் தில் பலியான அரச சேவையாளர்கள் எவராலும் இவர்களை மறக்கவே முடியாது.

அன்றையதினம் மக்கள் தொண்டுப்பணியில் ஈடுபட்டு உணவு, குடிநீர் வழங்கிக் கொண்டிருந்த 48 தொண்டர்களும் அந்த இடத்தில் துடிதுடித்து உயிர் இழந்ததை மறக்க முடி யாது.

2004ஆம் ஆண்டு 9ஆம் திகதியான இன்று நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமர் முருகன் ஆலயத்திலும் வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி 1995ஆம் ஆண்டு நவாலி இனப்படுகொலை தொடர்பாக நவாலி வடக்கு சோமசுந்தர புலவர் வீதியிலும், நவாலி சென். பீற்றர்ஸ் ஆலயப்பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை*
*ஊக்கார் அறிவுடை யார்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கொழும்பு குண்டு வெடிப்பு, சில சந்தேகங்கள்........!

நீண்டகாலத்தின் பின்னர் அதாவது சுமார் நான்கு வருடங்களின் பின்னர் இலங்கையின் தலைநகர் கொழும்பில் ஒரு குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு பெண்ணால் நிகழ்த்தப்பட்ட தற்கொலைக் குண்டு வெடிப்புச் சம்பவம் என வெகுஜன தொடர்பூடகங்கள் இதனை வர்ணித்து எழுதியுள்ள போதிலும், உண்மையில் குண்டு வெடிப்புத் தொடர்பான அரசதரப்பு மற்றும் அரச சார்புச் செய்திகளின் பிரகாரமே ஏனைய ஊடகங்களும் கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிட்டுள்ளன என்பதே உண்மையாகும்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு எவரும் இன்னமும் உரிமை கோராத போதிலும் வழமைபோல் விடுதலைப்புலிகளை நோக்கியே குற்றஞ்சாட்டுவோரின் விரல்கள் நீண்டுள்ளன.

அது மட்டுமல்ல சம்பவம் நடந்த சில மணிநேரங்களுக்குள்ளேயே, அது தொடர்பாக நம்பத்தகுந்த கதையும் சிருஷ்டிக்கப்பட்டு அதற்கேற்ப ஏனைய செய்திகளும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் நண்பகலில் நடைபெற்ற இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான சுயாதீனமான தரப்பினரின் விசாரணைகள் எதுவும் பூரணமாகாத நிலையில், பொலிஸ் விசாரணைகள் ஆரம்பகட்டத்தை தாண்டாத நிலையிலும், இது தொடர்பான கருத்து நிலைப்பாட்டு விளக்கமளிப்பது சாத்தியமற்றதாகும்.

நிரந்தரமற்ற, ஆனால் தொடர்ந்து இரண்டாண்டுக்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர்நிறுத்தம் - மற்றும் சமாதான உடன்பாட்டுச் சூழலில் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளமையானது பல்வேறுபட்ட சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் இடமளித்துள்ளது.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்குவைத்து தாக்கவந்த பெண் ஒருவரை சோதனையிட பொலிஸார் முயன்ற போதே இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ள போதிலும், இது சரியானதா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படாத ஒன்றேயாகும்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் 'ரவிராஜ' எழுப்பியுள்ள சந்தேகம் நியாயமானதே. அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து சந்தேகிக்கப்பட்ட பெண்ணை கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையம் வரை கூட்டிச் சென்று சோதனையிட்ட போதுதான் குண்டு வெடித்தது என்றால், குண்டிருக்மோ என்ற சந்தேகம் ஏற்பட்ட பின்னால், அதனைச் சோதிக்கத் தனியான - வெளியான பாதிப்புக்கள் ஏற்படாதென உறுதி செய்யப்பட்ட இடத்தில் கொண்டுபோய் சோதனையிட்டிருந்தால் இத்தனை பாதிப்புக்களைத் தவிர்த்திருக்கலாம், என்ற ரவிராஜின் கேள்வி யோசிக்க வேண்டியதொன்றேயாகும்.

அடுத்து குண்டு அல்லது வேறு ஏதாவது உயிராபத்தை விளைவிக்கக் கூடிய அது போன்ற ஒன்று இருக்கும் என்ற சந்தேகம் வந்த பின்னர் ஒரு அதிகாரி குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவுக்கும் அறிவித்துள்ளார். எனவே முறையின்படி அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வந்து சேர்ந்த பின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டு அதன்பின்னரே சோதனையை மேற்கொண்டிருக்க வேண்டும். அதற்குள் பொலிஸ் நிலையத்திலிருந்த ஏனையோருக்கு எச்சரிக்கை ஏதும் செய்யாது சோதனையிட அவசரப்படக் காரணமென்ன?

குண்டுவெடிப்பு நடந்த பின்னர் அரசாங்க சார்பில் வெளியான அறிக்கையில்- விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர் தான் இக்குண்டு வெடிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படவில்லை. மாறாக டக்ளஸ் தேவானந்தாவுக்கும் வேறு சில குழுக்களுக்குமிடையே பலவிதமான பிரச்சினை இருப்பதால் அவர்கள் காரணமாகவும் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளதை நோக்கின், டக்ளஸ் தேவானந்தாவின் உயிருக்கு வேறு யாரோ அவருக்கெதிரானவர்களால் உயிராபத்து இருந்திருக்கின்றது என்றும் - அதுபற்றி அவர் அரசுக்கு முன்கூட்டியே தெரிவித்திருப்பார் என்பதும் தெளிவாகிறது.

எனவே அந்தப் பக்கமான சந்தேகங்களை ஆராயாமல் - விசாரிக்காமல் விடுதலைப்புலிகள் தான் காரணமெனக் குற்றஞ்சாட்ட முனைவதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகவே தெரிகிறது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் மற்றொரு செய்தியையும் இணைத்துப் பார்த்தலும் அவசியமாகும்.

சில நாட்களுக்கு முன்னர் தற்கொலைத் தாக்குதல் அங்கியைக் கண்டுபிடித்துள்ளதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்திருந்தன. இதனை சகல வெகுசன தொடர்பூடகங்களும் வெளியிட்டும் இருந்தன.

இந்தச் செய்தியை சமாதானத்தைக் குழப்பும் நோக்கில் அதற்கு எதிரான சக்திகளே வெளியிட்டிருக்க வேண்டும் என்ற செய்திகளும், கருத்துக்களும் கூட வெளிவந்திருக்கின்றன.


இச்செய்தி வெளியாகி சில நாட்களுக்குள் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இவ் இரு சம்பவங்களுக்குமிடையில் ஒரு தொடர்பு இருப்பது போல் தெரிகிறது.

மட்டக்களப்பில் ஒரு வகையான நிழல் யுத்தத்தை ஆரம்பித்து சமாதான முயற்சிகளைக் குழப்ப எத்தனிக்கும் அரசாங்கத்தையும், இராணுவத்தையும் சேர்ந்த நாசகாரச் சக்திகள் தான், இந்த இரு சம்பவங்களுக்கும் பின்னணியில் இருந்திருக்கவேண்டும் என எவரும் கருதுவார்களேயானால் அதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

'கொள்ளுப்பிட்டி சம்பவம் சமாதான விரோதச் செயலல்ல' என்று அவசர அவசரமாக சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிக்கை விட்டிருப்பதையும் கவனத்திற் கொள்வது அவசியம்.

எதுவானாலும் இன்றைய அரசும், ஜனாதிபதியும் தமது பொறுப்பற்ற செயல்களினால் சமாதானத்திற்கு விரோதமான நடவடிக்கைகளால், நாட்டை மீண்டும் 1990 களின் இறுதிக் கட்டத்தில் நிலவிய இரத்தவாடை வீசும் இருண்ட காலத்தை மீண்டும் உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்களோ என்ற சந்தேகத்தை இக்குண்டு வெடிப்புச் சம்பவம் உறுதிப்படுத்தவே செய்கிறது.

# நாடும் நடப்பும்




# இரட்டைவேட அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபடுகிறது

## அஸ்வர் எச்சரிக்கை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரட்டைவேட அரசியலில் ஈடுபடுவதாக முன்னாள் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

ஐககிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொண்ட முஸ்லிம் காங்கிரஸ், மாகாண சபைத் தேர்தலில் சில மாவட்டங்களில் தனித்து போட்டியிடுகின்றது. இவ்வாறு தனித்து போட்டியிடும் இடங்களில் ஐக்கிய தேசிய கட்சிக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் விதமாகவும், ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குகளை சிதறடிக்கும் வகையிலும் முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டுவருகிறது.

இவ்வாறான இரட்டைவேட அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் கைவிட வேண்டும், இவ்வாறான செயற்பாடுகள் அந்தக் கட்சிக்கு எதிர்காலத்தில் கூடுதலான பாதிப்புக்களையே ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

# பேச்சுக்களில் தனித்தரப்பை வலியுறுத்தி வெளிநாட்டுத் தூதுவர்களை சந்திக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் சந்திக்கப்போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை தொடர்பாக சரியான முடிவுகளை எடுக்கத் தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள முஸ்லிம் காங்கிரஸ், இதன் காரணமாகவே வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு இது குறித்து விளக்கமளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பின் பின்னரும் முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கையினை ஏற்றுக்கொள்ள அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ மறுப்புத் தெரிவிததால், இலங்கை முழுவதும் போராட்டம் நடத்துவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரடி சில்வா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவமானது, அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக, அரசாங்கத்தால் பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஏற்கனவே இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க, மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## கொழும்பு குண்டுவெடிப்பு; பங்குச் சந்தைவீழ்ச்சி!

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து இலங்கையின் பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியடைந்ததாக பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி 30 வீதத்தினால் உடனடியாகவே வீழ்ச்சியடைந்ததாக அவை மேலும் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவத்தினால் இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு வெளிநாட்டவர்கள் அஞ்சுவார்கள் என்று தெரிவித்துள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர், உல்லாசப் பயணிகளின் வரவையும் இது வெகுவாகப் பாதிக்கும் என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலைமையை உணர்ந்து அரசியல் தலைவர்கள் சரியான முடிவுகளை எடுக்காவிட்டால், இது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்புக்களுக்குள்ளாக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஊடகவியலாளர் பயிற்சிநெறி ஆரம்பிப்பதற்கு முயற்சி!

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் ஊடகவியலாளர் பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பிக்க முயற்சிப்பதாகக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது - களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஊடகத்துறை மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகைதரவுள்ளார்கள்.

இவர்கள் இங்குவந்து செல்லும்வேளை எமது தொழில்நுட்பக் கல்லூரியில் ஊடகவியலாளர் டிப்ளோமா ஒன்றைத் தொடங்குவதற்கான ஆலோசனைகளைப் பெறவுள்ளோம்.

தொடர்ந்து களனிப் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் விரைவில் இக்கற்கைநெறியை ஆரம்பிக்கவுள்ளோம். இதற்கான விண்ணப்பங்களும் மாணவர்களிடமிருந்து கோரப்படும்.

இதேவேளை அரச அறிவியல் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறியும் விரைவில் எம்மால் கற்பிக்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## வீதியோரங்களில் பொருட்கள் வைக்கும் வர்த்தகர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்

சாவகச்சேரி நகரப்பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கையினாலும், நடைபாதைக் கடை மற்றும் வியாபார நிலையங்களுக்கு முன்பாக விற்பனைக்காகப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுவதனாலும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. எனவே, இவற்றை அப்புறப்படுத்தி சுமுகமான போக்குவரத்துக்கு ஒத்துழைக்கும்படியும், தவறும் வர்த்தகர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் அறிவித்துள்ளார். (29)

## எதிர்முகங்கள்... - துர்வாசன்

# தமிழன் என்பது மட்டுமல்ல; சிங்களவனும் அல்ல...

அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பேராசிரியர் அ.துரைராஜா நினைவு நிகழ்வில் பேராசிரியர் ரதன்ஜீவன் ஹேரட் ஹூல் கலந்து கொள்வதை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தியதை குடாநாட்டுப் பத்திரிகையொன்று படங்களுடன் செய்தியாக வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தி பொய்யென்றும் புகைப்படங்கள் போலியானவையென்றும் தனது பெயரைக் ஹேரட் என்பதற்குப் பதிலாக ஹெரட் என்று போட்டிருந்ததையும் குறிப்பிட்டு, மறுப்புக் கடிதம் ஒன்றை ஹூல் எழுதியிருந்தார்.

வழமை போலவே ஹூல் பிரச்சினையின் மையத்தைத் தொடாமல், நடுப்பெயரைத் தவறாக எழுதிவிட்டது போன்றவற்றைப் பிடித்துக் கொண்டு தொங்குபவராகக் காணப்படுகின்றார்.

தனக்கெதிராக எழுதப்படும் விடயங்களுக்குப் பதிலளிக்காமல் செய்தியிலுள்ள அற்ப தவறுகளைப் பிடித்துக் கொண்டு தொங்குவது இது தான் முதல் தடவையல்ல.

04.04.2003 அன்று வன்னியில் இருந்து வெளியாகும் 'வெள்ளி நாதம்' பத்திரிகையில் UTHR-J என்பவர்கள் யார்? என்ற கட்டுரையில் இவர் குறித்த பல உண்மைகள் புட்டுக் காட்டப்பட்டிருந்தன.

i) 30 க்கு மேற்பட்ட UTHR-J இன அறிக்கைகளைத் தயாரித்து வழங்கியதில் இவர் பிரதான பங்கு வகிக்கிறார்.

ii) யாழ்.பல்கலை ஆசிரியர்கள் எவருமே அங்கம் வகிக்காத 'றோ'வின் ஊடுருவல் காரணமாக 1989ஆம் ஆண்டுகளிலேயே கலைக்கப்பட்டு விட்ட UTHR - J அமைப்பின் பெயரைக் குடாநாட்டுக்கு வெளியில் இருந்தே இவர் வசதியாகப் பயன்படுத்துகிறார்.

iii) 'றோ'வின் ஊடுவல் காரணமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தவர், இநதியாவுக்கு எதிராகக் குரல் எழுப்பிப் புகழ்பெற்ற ரத்னஜீவன் ஹூல் தான்.

iv) ஐந்து வருடங்களாக தீவிர யுத்த நடவடிக்கையில் ஊடகங்கள் எதுவும் வடபகுதிக்கு அனுமதிக்கப் படாத வேளையில் விதிவிலக்காக யாழ். செய்திகளை இலங்கை இராணுவப் புலனாய்வுத்துறையின் அனுசரணையுடன் விலாவாரியாகக் ஹூல பெற்றிருந்தார்.

v) ஹூல் புலனாய்வு சேவைகளால் ஆட்டுவிக்கப்படுகிறார்.

vi) UTHR - J அறிக்கைகள் புலிகளை இழிவுபடுத்துவதையும் இலங்கையிலுள்ள பிரச்சினை சிங்கள - தமிழ் மக்களுக்கு இடையேயானதல்ல. புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயானது என்பதாகவும், சித்திரிப்பதையும் நோக்கமாகக் கொண்டவை.

இந்த விடயங்களுக்குள் 06.06.2003 வெள்ளிநாதம் இதழில் பதிலளிக்க முற்பட்ட ஹூல் யாழ்.பல்கலைக்கழகத்தில் தகுந்த தகைமைகள் இல்லாமல் பூச்சிய ஆராய்ச்சியுடன் புத்திஜீவிகளாக நடிக்கிறார்கள் என்றும் இவர்கள் தான் தனக்கு எதிரான தகவல்களைத் தருவதாகவும் கூறி, பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சித்தாரே ஒழிய, அவர் குறித்த தகவல்களை உறுதியான முறையில் மறுக்கவில்லை என்பதை 06.06.2003 வெள்ளிநாதம் இதழைப் பார்ப்பவர்கள் எவரும் புரிந்துகொள்வார்கள்.

இதற்கிடையே வைகாசி மாதம் 2003 வெள்ளிநாதம் இதழில் UTHR - J பின்னிணைப்பு - 1 என்ற கட்டுரையில் இவரது தந்தையார் ஆறுமுக நாவலருடன் துண்டுப்பிரசுரப் போர் ஒன்றை நடத்தியதாகவும் UTHR - J அறிக்கைகளை வெளியிடுவதும் அதனை ஒத்ததுதான் என்றும் கூறப்பட்டிருந்தது.

இதில் தந்தையார் என்று தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றும், அது தனது பூட்டனுக்குப் பூட்டன் என்றும், காலவழுவில் தொங்கிக்கொண்டு திசை திருப்பலில் ஈடுபட்டாரே தவிர, தானும் தன் சகோதரர்களும் கேந்திர முக்கியத்துவமான இடங்களில் இருந்துகொண்டு தமிழத் தேசியத்தின் விரோத சக்திகளுக்கு துணைபோவது பற்றி எழு தப்பட்டிருந்தது பற்றியோ, தன் சகோதரனான கலாநிதி ராஜன் ஹூல் வேறு பலருடன் சேர்ந்து "முறிந்த பனை மரம்" (Broken Palmyrah) எழுதியது பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால், குறித்த கட்டுரை ஆசிரியரை மதச் சர்ச்சை ஒன்றுக்குள் இழுத்துவிட முயன்று இருக்கின்றார் என்று கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

08.08.2003 வெள்ளிநாதம் இதழில் இவரது இரண்டு கடிதங்களுக்கும் பதிலளித்த UTHR - J என்பவர்கள் யார்? கட்டுரை ஆசிரியர், முரண்பாடுகளின் மொத்த வடிவமாக ஹூல் எப்படி இருக்கிறார் என்பதை அழகாக எடுத்துக் கூறியிருந்தார்.

i) "ஆசிய விழுமியங்கள்" என்பவை காட்டுமிராண்டித்தனத்தை மறைப்பதற்கான போர்வை என்றவர், வெளிநாட்டில் தொடர்ந்து வாழ்ந்தால் தன் பிள்ளைகள் தன்னிலிருந்து அன்னியப்பட்டு விடுவார்கள் என்பதால் தாய் நாடு திரும்பியதாகக் கூறி ஆசிய விழுமியங்களாலேயே தானும் வடிவமைக்கப்பட்டிருப்பது தன்னை அறியாமலே வெளிக்காட்டி இருக்கிறார்.



ii) தகமையற்றவர்கள், பேராசிரியர்கள் போட்டுக்கொள்கிறார்கள் என்று கண்டிக்கும் கடிதத்தில் ஹூல் என்று ஒப்பமிட்டவர் அதே காலப்பகுதியில், அதாவது யாழ்ப்பாணக் கல்லூரியில் 05.02.2002 இல் ஆற்றிய உரையை டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியிட்டபோது அதன் கீழே பேராசிரியர் ஹூல் எனறு அழகாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

iii) விழாவொன்றில் மங்கல விளக்கு ஏற்றக்கூப்பிட்ட பொழுது அதன் உச்சியில் சேவல் வடிவம் இருந்ததால் தான் ஏற்றப்போக வில்லை என பச்சைப்பொய்யுடன் பெருமையடித்துக் கொண்டிருக்கும் (05.02.2002 உரையில்) ஹூல், நெருப்பைத் திக்கொடியைக் கொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் "சேவை"யாற்ற வருவதற்கு தகைமிழாக நிற்கிறார்.

என்றவாறாக ஹூலின் சுய வடிவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அத்தோடு இவரைப்பற்றிய விவரங்களின் அடிப்படையாக 28.07.2002 திகதி சண்டே லீடர் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியருக்கு கடிதப் பகுதியில் வந்த "UTHR-J - USURPER WHITH A HIDDEN AGENDA" என்ற தலைப்பிலான கடிதமே இருந்தது என்பதை வெளிப்படுத்திய கட்டுரையாசிரியர் முடிந்தால், சண்டே லீர் பத்திரிகைக்கு மறுப்பு அனுப்பும் படி ஹூல்லுக்கு சவால் விட்டிருந்தார். ஆனால், இன்று வரை ஹூல் சண்டே லீடருக்கோ அல்லது வெள்ளி நாதத்துக்கோ மறுப்பு எதையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஆற்றிய சேவைக்கு (அல்லது துரோகத்துக்கு) பரிசாகத்தான், அண்ணளவாக 2 வருடகாலத்துக்கு முன் நாடு திரும்பியிருந்த ஹூலுக்கு பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதா, என்பது பெறுமதி மிக்க கேள்வியாக எழுகிறது. வேதாகமத்தில் உள்ள ஒரு வனம்

"....... என்னோடில்லாதவன்
எனக்கு எதிராக இருக்கிறான்...."
என்று கூறுகிறது.

எவரும் விரும்பியோ விரும்பாமலோ ஈழத்தமிழ்த் தேசியத்தின் ஒரே பிடிமானமாக இன்றைக்கு இருப்பது விடுதலைப் புலிகள்தான். எனவே புலிகளைக் கொச்சைப்படுத்த நினைக்கும் ஹூல் போன்றவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பது எவரும் சொல்லித் தெரியவேண்டிய விடயமல்ல.

ஆபிரிக்க கவிதைத் தொகுதியொன்றின் முன்னுரையில் "தான் கறுப்பன் என்பது மட்டுமல்லாமல் தான் வெள்ளையனும் அல்ல என்பதை உணர்ந்து கொண்டதன் எதிரொலிகள் ஆபிரிக்கக் கவிதைகளில் ஆழமாக எதிரொலிக்கின்றன" என்று கூறப்பட்டுள்ளது.

இதே போலவே, ஹூல், சிதம்பரம், மகேந்திரன் முன்னாள் தூதுவர் - தூதரக தமிழ்ப் பணியாளர் தமிழில் கதைத்தால் கொழும்புக்கு அனுப்பி விடுவேன் என்ற சிங்கள விசுவாசி, அர்ஜீனா மகேந்திரன் (முதலீட்டுச் சபைத்தலைவராக இருநதவர் - தமிழ் மீனவர்கள் மீன்பிடிக்க முடியாமல் இருந்த கிழக்குக் கடற் பரப்பில் சீன மீனவர்களுக்கு றோலர் அடிக்க அனுமதி பெற்றுக் கொடுத்தவர்) போன்றோர் என்னதான் குத்தி முறிந்து சிங்களத்துக்குச் சேவை செய்தாலும், அவர்கள் சிங்களவர்கள் அல்ல என்று உணரும் காலம் வந்தே தீரும. சிஹல உறுமயவின் ஸ்தாபகரான B.L.குணசேகர, தான் சிங்கள பௌத்தன் அல்ல என்று உணர நேர்ந்தது போல்.

UTHR-J என்பவர்கள் யார்? என்ற கட்டுரையின் இறுதியில் அக்கட்டுரையாசிரியர், உகண்டா நாட்டினர் ஒக்கோட் பிற்ரெக்கின் "லாவின் வின் பாடலிலிருந்து....." என்ற கவிதையின் சில வரிகளை மேற்கோள் காட்டியிருக்கிறார்.

"..........................
ஒக்கொல்வின் தலையை
நூல்கள் என்ற காட்டில்
தொலைத்துவிட்டார்
..........................
வகுப்பறைகளில் வைத்து
அவர்களுடைய விதைகள்
பெரிய புத்தகங்களால்
நசுக்கப்பட்டுவிட்டன........."

ஹூல் போன்றோருக்கு மிகப் பொருத்தமான வரிகள் இவை அல்லவா! ♦

## செய்திக்கட்டுரை... -த. அருவி

# நமக்காக நமது கடலை நாமே காக்க வேண்டும்!

இழுவை மீன்பிடி தொழிலாளர்கள் மாற்று மீன்பிடி முறைகளை எற்பாடு செய்து கொண்டு அவ்வாண்டுடன் இழுவை மீன்பிடி முற்றாக நிறுத தப்பட வேண்டும் என தாயக இழுவை மீன்பிடித் தொழிலாளர்களிடம் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கேட்டுள்ளார்.



குருநகர் - மீன்பிடி வள்ளங்கள்

கடல் உயிர்களின் வாழ்வுக்கு ஆதாரமான எமது கடற்சூழலை வளங்களை பாதுகாப்பவே இழுவை மன்பிடியை நிறுத்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண இழுவை மீன்பிடி தொழிலாளர்கள் இதற்கு உடன்பட்டு விட்டனர். யாழ்ப்பாணத்தில் 70 வரையான இழுவை மீன்பிடி படகுகள் உள்ளன. மன்னாரில் இது போன்ற மாற்று மீன்பிடிக்கும் இழுவை மீன்பிடித் தொழிலாளர்கள் இவ்வாண்டுக்குள் மாறவேண்டும். இழுவை மீன்பிடியினால் எமதுகடல் வளமான பவளப்பாறைகள் அழிக்கப்படுகின்றன. இதனால் கடலுயிர்கள் வாழ்வு அழிகின்றது. நீண்ட கடல் நோக்கில் கடலுயிர்கள் வாழ்வதற்கான சரணாலயமாக எமது கடல் இல்லாமல் போகும். மன்னார் வளைகுடாவும் பாக்கு நீரிணையும் கடலுயிர்களின் சரணாலயமாக, பவளப்பூங்காவாக திகழ்கின்றன.

இந்திய இழுவைமீன்பிடி இந்த வளங்களை தொடர்ச்சியாக அழித்து கொண்டேயுள்ளது. கடைசியாக தமிழக- ஈழத்தமிழ் மீனவர்கள் மேற்கொண்ட சந்திப்பில் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளுக்கு மாறாக தொடர்ச்சியாக தமிழக இழுவை மீன்பிடி படகுகள் தமிழர்தாயக கடல் வளங்களை அழிப்பது தொடர்கின்றது. உறவுகளைப் பேணுவ தற்காக ஈழத்தமிழ மீனவ்கள் தமிழக மீனவர்கள் தொடர்பில் நன்மையளிப்பதாக நடந்து கொள்ள அடாவடியாகவே தமிழக மீனவர்கள் கததிகள் வந்து சகிதம் வந்து ஈழத்தமிழர் தாயக கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க நுழைகின்றனர். இது ஈழத தமிழ் மீனவர்களை மாற்று முடிவுக்கு தள்ளச்செய்கின்றதாக அமைகின்றது. தமிழக கடலில் இந்த இழுவை மீன்பிடிக்கு தடை உள்ளது. இந்திய அரசு தமிழக கடலையும் தமிழக கடற்தீவுகளையும் பேணுவதற்கு கோடிக்கணக்கான ரூபாவை செலவழிக்கின்றது. அங்கு பவளப் பாறைகள், தீவுகளைப் சுற்றலாப்பயணிகளுக்கு காட்டி காசு பண்ண இந்திய அரசு செயற்படுகின்றது. மறுபுறம் இந்திய இழுவைப் படகுகள் ஈழத் தமிழர் தாயக கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீனவர்களின் தொழிலை பாதிப்புறச் செய்வதிலும், வளங்களை அழிப்பதையும் தீவிரமாக புரிகின்றன.

இந்த நம் கடல் வளத்தை அழித்து தமிழக இழுவைப்படகுகள் பிடிக்கும் கடலுயிர்கள் அங்குள்ள பெரு முதலாளிகளுக்கே சென்று சேர்கின்றன. இதன் மூலம் பெரும் ஏற்றுமதி வருமானம் அங்கு எட்டப்படுகின்றது. ஆனால் கடலுக்கு சொந்தமான ஈழத் தமிழர் தாயக மீனவர்கள் வறுமையில் வாடுகின்றனர். ஆனால் தமிழக ஏழை மீனவர்களின் வாழ்வை பாதிப்புறச் செய்யக்கூடாது. ஏன ஈழத்தமிழர் தாயக மீனவர்கள் தொடர்ந்தும் பொறுத்திருக்க முடியாததாக பொறுமையைச் சோதிக்கும் நிலைமையே காணப்படுகின்றது. கடற்படை அத்துமீறிய இழுவை மீன்பிடிக்கு திட்டமிட்டு ஒத்துழைத்து சில இழுவைப் படகுகளை மட்டுமே பிடிக்கின்றது. 54 இந்திய இழுவைப் படகுகள் படையினரால் பிடிக்கப்பட்டு தடுத்து வைககப்பட்டுள்ளன.



மன்னார் பேசாலையில் தொழிலீடுபடும் படகு

கடற்படை ஈழத் தமிழர் மீனவர்களை பாதிப்புறச செய்ய இந்திய இழுவைப்படகுகள் அனுமதிக்கப்படுவது ஈழத்தமிழர் தாயக மீனவர்கள் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியாத சூழலே ஏற்படுத்தப்பட்டுளளது. இந்நிலையில் தொழில்காப்புடன் வளக்காப்பும் முக்கியமானதாகும்.

வளம்மிக்க தமிழர்தாயக மேற்குக்கடல் மன்னார் வளைகுடாவில் கடலுயிர் காப்புக்கான 11 வகையிலான கடற புற்கள் 13 இன சதுப்பு நில தாவர வகைகள். 16 இன கடற் பாசி உயிர்கள், 450 சகல மீனினங்கள், 6 இன திமிங்கிலங்கள், 14 இன டொல்பின்கள், 25 இன கடல்க குதிரைகள், 98 இன பவளப்பாறைகள், 100இன முட்டொலி உயிரிகள், 200 இன மெல்லுடலி உயிரிகள், 80 இன கணுக்காலி உயிர்கள் உள்ளன. உலகின் 7 ஆமை இனங்களில், 5 இனங்கள மன்னார் வளைகுடாவில் உள்ளன. உலகின் 161 மீனினங்களில் 131 இனங்கள் இங்குதான் இருக்கின்றன.



நெடுந்தீவு பவளப்பாறை வேலி

உலகிலேயே 'வாயத் தீவுகளில் மட்டும் உள்ள மிக அரிய கடலினமான டூகோங் பாக்நீரிணையிலும் மன்னார் வளைகுடாவிலும் மட்டும் உள்ளது. ஆவுளி அல்லது கடற்பசு என இது தமிழில் அழைக்கப்படுகின்றது.அவற்றில் ஒன்று யாழ்ப்பாணக் கடலில் வைத்து அண்மை மாதங்களில் இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டது. இந்தளவு கடலுயிர் வளத்தைக் காக்கும் பவளப்பாறைகளே எமக்கு உள்ள மழைக்காடு எமது நிலப்பரப்பில் மழைக் காடு இல்லை. ஆனால் எமக்கு கடலில்த்தான் மழைக்காடு உண்டு. அதுதான் பவளப்பாறைகள். பவளப் பாறைகள் பூமியின் காலநிலை வளி மண்டல வெப்பஅதிகரிப்பை தடுக்கும் பணியை கடலின் கீழ் இருந்து செய்கின்றன. இவைதான் தமிழர் தாயக மேற்குக் கரையை கடலரிப்பிலிருந்து பாதுகாக்கின்றன.

இழுவை மீன்பிடியால் பவளப் பாறைகள் அழிக்கப்படுவது எமது வளத்ததை நாமே அழிப்பதாகும்.

நமது வளத்தைநாமே காக்க வேண்டும். மன்னாரில் டைனமைட் மீன்பிடிவேறு பவளப்பாறைகளை அழிக்கின்றன.. இதனைத் தடுக்கும் நடவடிக்கைகள் கடற்புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோல் இழுவை மீன்பிடியை மன்னார் யாழ்ப்பாண இழுவை மீன்பிடித்தொழிலாளர்கள் நிறுத்தவேண்டும் அதேவேளை தமிழக இழுவை மீன்பிடியையும் நிறுத்தவேண்டும்.

நமக்காக நமது கடலை
நாமே காக்க வேண்டும். ♦

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# பாக்தாத்தில் குண்டுத் தாக்குதல்
# நான்கு அமெரிக்கப் படையினர் பலி



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் தாக்குதலில் - நான்கு அமெரிக்கப்படையினர் உட்பட ஐவர் கொல்லப்பட்டதுடன் ஒரு அமெரிக்கப்படை வீரர் காணாமற் போயுள்ளார்.

பாக்தாத்தின் வட பகுதியின் 'சமாறா' என்ற இடத்தில் அமைந்திருந்த ஈராக் தேசிய காவற் படையின் தலைமை அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் நான்கு அமெரிக்கப் படையினரும், ஈராக் காவற்படை அதிகாரியொருவரும் பலியாகியுள்ளதுடன், ஒரு அமெரிக்கப் படைவீரர் ஒருவரும் காணாமற் போயுள்ளார்.

ஈராக்கிய காவற் படையினராலும் அமெரிக்க இராணுவத்தினராலும் பயன்படுத்தப் பட்டுவந்த இந்தக் கட்டடத்தின்மீது மேற்கொளளப்பட்டுள்ள இந்தத் தாக்குதலில் குறைந்தது 20 அமெரிக்க இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவ அதிகாரி - குறிப்பிட்ட கட்டடத்தின் மீது நான்கு மோட்டார்க் குண்டுகள் ஏவப்பட்டதாகவும், கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது அமெரிக்க இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்திய வேளையில் அவர்கள் தப்பிச்சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த படைவீரர்கள் பாக்தாத்திலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினமும் பாக்தாத்தில் இடம்பெறற தாக்குதலில் இரண்டு ஈராக்கிய காவற்படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பின்லாந்தில் பாகிஸ்தான் அதிபர்!



பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஸ்பெயின், மற்றும் பின்லாந்து உட்படப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். பின்லாந்தில் அவர் அந்த நாட்டு அதிபர் தார்ஜா ஹலோனனை சந்தித்து இரு நாட்டு உறவுகள், தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்லாந்து அதிபருடன் முஷாரப் 'கோல்ப்' ஆடினார். 'கோல்ப்' மைதானத்துக்கு முஷாரப்பைக் குட்டிக் காரில் வைத்து பின்லாந்து அதிபர் ஓட்டிச்சென்றார். பயணத்தின் போது இரு தலைவர்களும் பல்வேறு விஷயங்கள் குறித்துப் பேச்சு நடத்தியபடி சென்றனர்.

உலக நோக்கு

# குவான்ரனமோ சிறைக் கைதிகளை விசாரிக்க புதிய இராணுவ நீதிமன்றம்
## பென்ரகன் தெரிவிப்பு



குவான்ரனமோவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளை விசாரிப்பதற்குப் புதிய இராணுவ நீதிமன்றம் ஒன்றை அமைக்கவுள்ளதாகப் பென்ரகன் தெரிவித்துள்ளது.

அமெரிக்க உயர் நீதிமன்றம் ஒன்று, இந்தக் கைதிகள் தமது உரிமைகளை அமெரிக்க நீதிமன்றங்களில் முறையிடலாம் என வழங்கிய தீர்ப்பையடுத்தே அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

குவான்ரனமோ சிறையில் உள்ள 595 கைதிகளின் விபரங்கள் குறித்த விசாரணை 10 நாட்களுக்குள் முடிக்கப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள நீதிமன்றில் மூன்று சட்டத்தரணிகள் இடம்பெறுவர் எனவும், அவர்களில் ஒருவர் இராணுவ சட்டத்தரணியாக இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், கைதிகளின் சார்பாக எவரும் ஆஜராக அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும், அவர்களுக்கு உதவியாக ஒரு இராணுவ அதிகாரி இருப்பார் எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்க உயர் நீதிமன்றம் - கைதிகள் தமது முறைப்பாடுகளை அமெரிக்க நீதிமன்றில் செய்யலாம் என, கடந்த வாரம் அறிவித்தமையானது ஜனாதிபதி புஷ் தலைமையிலான நிர்வாகத்திற்குக் கடும் அழுத்தத்தைக் கொடுத்துள்ளதாகப் பி.பி.ஸியின் நிக்சைல்ட் தெரிவித்தார்.

ஏற்கனவே, 9 சிறைக் கைதிகள் வொஷிங்ரனில் உள்ள நீதிமன்றில் தமது வழக்குகளைப் பதிவுசெய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிம்பாவேக்கு உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யவேண்டுமென்கிறது ஐ.நா



சிம்பாப்வேயில் அறுவடை செய்யப்பட்ட தானியங்களின் வகை அந்த நாட்டிற்கு போதாமல் இருப்பதாகவும், எனவே அந்த நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யவேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மட்டும் அந்த நாட்டிற்கு மூன்று இலட்சத்து 25 000 தொன் உணவு வகைகள் தேவைப்படுவதாக ஐ.நா.வின் உணவு, விவசாய அமைப்புத் தெரிவித்தது.

இந்த வருடம் 2.4 மில்லியன் தொன் சோளம் அறுவடை செய்யப்படுமென சிம்பாப்வே அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அரைப்பங்கைவிடக் குறைவாகவே மில்லியன் தொன் தானிய வகை அறுவடை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக உலக உணவு விவசாய அமைப்புத் தெரிவித்தது.

பருவம் தப்பிய மழை, தேவைக்கேற்ப கிடைக்காத விதையின் அளவு, கடும் பஞ்சம் மற்றும் தவறான காணிச் சீர்திருத்தம் போன்றவற்றாலேயே குறைந்தளவான அறுவடை கிடைக்கவுள்ளதாக அந்த அமைப்புத் தெரிவித்தது.

கிடைக்கும் புதிய தகவல்களின்படி 30 தொடக்கம் 40 வீதத்திற்கு இடைப்பட்ட விவசாயிகள் தமது சொந்த நிலங்களில் உற்பத்தி நடவடிக்கைகளை கடந்த மாதத்தில் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் 2.3 மில்லியன் மக்களுக்கு - உணவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுமென உலக உணவு விவசாய அமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிம்பாப்வேயில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க, அந்த நாடு உணவுப் பொருட்களை இறக்குமதிசெய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதாக, உலக உணவு விவசாய அமைப்பின் தலைவரான ஹென்றி ஜோஸரன்ட் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.


சிம்பாப்வேயில் சுமார் 12 மில்லியன் மக்கள் உள்ளனர். ஆனால் அடுத்த வருடத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களின் அளவு 2.35 மில்லியன் தொன்னாகும். ஆனால், 1.3 மில்லியன் உணவுப் பொருட்கள் பற்றாக்குறையாக வருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஹாரிபொட்டர், ஸ்பைடர் மேனுக்கு சீனாவில் தடை விதிப்பு

பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவுலிங் எழுதிய ஹாரிபொட்டர் நாவல் திரைப்படமாக வெளிவந்து உலகம் முழுவதும் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. வசூலிலும் இந்தப் படம் சாதனை நிகழ்த்தி வருகிறது.

உலகம் முழுவதும் இந்த ஹாரிபொட்டர் படமும், ஸ்பைடர்மேன் - 2 படமும் வெற்றிகரமாக ஓடும் நிலையில் சீனாவில் இந்தப் படங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய கலாசாரத்தை இங்கு பரப்பி சீன கலாசாரத்தை இந்தப் படங்கள் சீரழித்து விடுகிறது என்கிறது சீன அரசு. இந்தத் தடையை மீறி திருட்டு வி.சி.டி.க்கள் சீனாவில் கிடைக்கிறது என்பது வேறு விடயம். ஹாரிபொட்டருக்கும், ஸ்பைடர்மேனுக்கும் தடைவிதித்த சீன அரசு ஜோர்ஜ்புஷ்ஷைக் கிண்டல் செய்து வெளிவந்த படத்துக்கு மட்டும் தடைவிதிக்கவில்லை.

# காஸாவில் இடம்பெற்ற மோதல்களில் பலர் கொல்லப்பட்டதாக அறிவிப்பு



(பலஸ்தீனம்)

பலஸ்தீனத்திலுள்ள வடக்கு காஸாப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்றுவரும் வன்செயல்களில், பல பலஸ்தீன ஆயுததாரிகள் கொல்லப்பட்டதுடன், இஸ்ரேலியப் படைச் சிப்பாய் ஒருவரும் கடும் காயங்களுக்கு இலக்காகினார்.

வடக்கு காஸாப் பகுதியிலுள்ள பீற்ஹானவுன் நகரத்தில் நேற்றுக் காலை நடந்த சம்பவத்திலேயே பலர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர்.

தமது தளபதி ஒருவர் உட்பட ஏழு பொதுமக்கள் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஹமாஸ் தெரிவித்தது. ஆனால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் பொதுமக்கள் அல் - அக்ஷா மார்ட்டியஸ் பிரிகேட்டைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நகரத்தைச் சுற்றி இஸ்ரேலியப் படையினர் தமது நிலைகளை அமைத்துள்ளதாகவும், இது ஒரு மிகப் பெரிய நடவடிக்கை எனவும் பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் எவ்வாறு இடம் பெற்றது என்பது தெரியாமல் இருப்பதாகவும், ஆனாலும் இஸ்லாமிய குழுவான அல் - அக்ஷா மார்ட்டியர்ஸ் பிரிகேட்டின் சிறிய குழுவொன்றை இஸ்ரேலியப் படையினர் திடீரெனச் சந்தித்த வேளையே இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் நடந்தவேளை அந்தப் பகுதியில் நின்ற இருவர் கொல்லப்பட்டதாகவும தமது தரப்பில் படையினர் ஒருவர் காயமடைந்ததாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் ஹமாஸ் போராளிகள் சென்ற வாகனம் மீது இஸ்ரேலிய விமானப் படையினர் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் ஐந்து வயதுச் சிறுவன் உட்பட மூன்று பலஸ்தீனர்கள் படுகாயமடைந்தனர்.

தமது உறுப்பினர்கள் காரில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை, இஸ்ரேலிய விமானப் படையினர் தாக்குதலை மேற்கொண்டபோதும் அவர்கள் தப்பிவிட்டதாக ஹமாஸ் தெரிவித்தது.

காஸாவின் தென்பகுதிக்கு இஸ்ரேல் இராணுவதத்தினர் - ஆயுதம் தரித்த வாகனங்கள் மற்றும் புல்டோசர்கள் மூலம் நேற்றுமுன்தினம் இரவு கான்யூனுஸ் அகதி முகாம் பகுதிக்குள் பிரவேசித்தனர்.

பலஸ்தீன ஆயுததாரிகள் தங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய வீட்டைத் தாம் அழித்துவிட்டதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பலஸ்தீன பிரதமர் அகமட் கூரே, அனுசரணையாளர்களான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா. மற்றும் ரஷ்ய பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து, பலஸ்தீன பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடத்திய பின் நேற்று இந்த வன்செயல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமாபாத்திலுள்ள
# அமெரிக்க, பிரிட்டன் தூதரகங்கள் மீண்டும் வழமைக்குத் திரும்பின!

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கத் தூதுவராலயங்கள் மீளவும் தமது பணிகளை வழமையான நிலையில் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

இந்த வாரத்தில் இரு தூதுவராலயங்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையடுத்தே அவையிரண்டும் மூடப்பட்டிருந்தன.

கடந்த திங்கட்கிழமை பிரிட்டன் தூதுவராலயத்திற்குக் கிடைத்த தொலைபேசி அச்சுறுத்தலையடுத்து, அந்தத் தூதுவராலயச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. அதுபோலவே அமெரிக்கத் தூதரகமும் தனது சேவைகள் சிலவற்றை இடைநிறுத்தியதுடன், அமெரிக்க சுதந்திரதின நிகழ்வுகள் கடந்த நான்காம் திகதி நடைபெறவிருந்தபோதும் அந்த நிகழ்வும் இரத்துச் செய்யப்பட்டது.

இதனையடுத்து வெளிநாட்டுத் தூதரகங்கள் இருக்கும் இஸ்லாமாபாத் பகுதியில் பாகிஸ்தான் பாதுகாப்பை அதிகரித்திருந்தது.

இதன்பின்னர் மீளவும் நேற்று பிரிட்டன் தூதரகம் திறக்கப்பட்டதுடன் சகல சேவைகளும் இடம்பெற்றுவருவதாக பிரிட்டன் தூதரகப் பேச்சாளர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். அதுபோலவே அமெரிக்காவின் விசா வழங்கும் பகுதி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகமும் உறுதிசெய்துள்ளது.

ஈராக் மீதான அமெரிக்கப் போரையடுத்து பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க, பிரிட்டன் மற்றும் அவுஸ்ரேலிய மக்கள் - இஸ்லாமியப் போராளிகளின் தாக்குதல் இலக்காக மாறியுள்ளதாக, இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

ஈராக் மீதான தாக்குதலையடுத்து வெளிநாட்டவர்கள், அதிலும் குறிப்பாக கிறிஸ்தவர்கள் தாக்குதல் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மருத்துவபீட மாணவியின் பிரச்சினை: ஆராய்வதற்கு விசேட குழு அமைப்பு!

## துணைவேந்தர் மோகனதாஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவியின் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய மாணவியின் கோரிக்கைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலேயே மாணவி உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளார்.

எனினும், மாணவி ஏற்கனவே எழுதிய பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவது மற்றும் அவருக்கு பரீட்சை எழுதுவதற்கு வாய்ப்பளிப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த ஆசிரியர் குழாத்தைக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக்குழுவே, இனிவரும் காலங்களில் மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து கவனித்துக்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று மாலை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி ப.புஷ்பரட்ணம், பிரதிப் பிரதம ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஐ.ஜி. சந்திரசேகரம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் மருத்துவ மாணவர் ஒன்றியச் செயலாளர் போன்றோரால் துணைவேந்தர் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ். செல்வக்குமார் தெரிவிக்கையில் -

துணைவேந்தர் கூறியபடி, விசேட குழு அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மருத்துவபீட மாணவிக்கு உரிய நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும் வரை அனைத்துப்பீட மாணவர்களதும் வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடருமெனக் கூறினார்.

மாணவர்களின் பிரச்சினைகள் மிகவும் அவதானமாகக் கையாளப்பட்டு வருவதால், அவர்கள் சார்ந்த இந்தப் பிரச்சினை விரைவில் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டு, மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லத்தக்க சூழ்நிலை உருவாக்கப்படும் என பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி ப.புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

எனினும், மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் இன்றும் தொடருமெனவும் தெரிவிக்கப்படுகிறது.(ப)

# தற்போதைய யுத்த நிலைமைக்கு ஜனாதிபதி, ஜே.வி.பியே காரணம்!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஜே.வி.பியுமே பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் விமானங்கள் பறக்கமுடியாத நிலை காணப்பட்டது.

உத்தியோகபூர்வமற்ற ஈழம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி அன்று அரசாங்கத்தைப் பொறுப்பேற்றது.

தற்போதைய சமாதான முனைப்புகளின் ஒவ்வொரு அம்சங்களும் சந்தேகத்துக்குரியதாகவே தென்படுகின்றன.

கடந்த ரோக்கியோ மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்கு பாரிய நிதியைப் பெற்றுக்கொடுக்க வழிசெய்தது. எனினும் அதனை இன்றைய அரசு சீர்குலைத்துவிட்டது எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

# கொழும்பு குண்டுவெடிப்புக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு!

## புதிய இடதுசாரி முன்னணி கூறுகிறது

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என புதிய இடதுசாரி முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி செய்திக் குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் -

அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக நாட்டில் ஸ்திரமற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தன்னாட்சி அதிகார வரைபை தமது சமர்ப்பித்திருந்தபோதும், அதற்கு இதுவரையில் அரசாங்கம், உரிய பதிலை வழங்கவில்லை.

கருணாவைப் பயன்படுத்தி, அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்யும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இது நாட்டுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் செயலாகும்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது. (01)

## முன்னர் கொண்டுவந்த....

ரில் ஊடுருவியுள்ளார்களென கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு உளவுப் பிரிவினர் தெரிவித்த போதும அவர்கள் செய்ததென்ன? ஒன்றுமே நடக்கவில்லை.

கொழும்பில் தற்போது குண்டு வெடிப்பதில்லையென அகந்தை கொள்கின்றார்கள்.

கடந்த இரண்டு வருட காலத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடிப்புக்கள் நடைபெறாததற்கு அவை தேவைப்படும்போது வெடிக்கவைக்க முடியுமென்பதற்காக கொழும்பு நகரில் இடம்பிடித்துக் கொள்ள இடம் வழங்கியதனால் இன்று கொழும்பு நகரம் பாதுகாப்பற்றுப் போனதுடன் பாதுகாப்பும் பூச்சியத்திற்கு இறங்கியது.

அவர்கள் மௌனிக்கச் செய்த குண்டுகள் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசின் காலத்தில் வெடிக்கின்றன.

இதனை நாட்டு மக்கள் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொழும்பு நகரினுள்ளும், நாட்டின் பொருளாதார மத்திய நிலையங்களைச் சுற்றியும் கரும்புலிகள் இடம் பிடித்துள்ளனர் என இராணுவ உளவுப் பிரிவு தெரியப்படுத்திய போது நடவடிக்கை எடுக்காத ஐக்கிய தேசியக் கட்சி -

தற்போது குண்டு வெடித்தவுடன் அரசாங்கத்தின் பக்கம் விரலை நீட்டிக் கொண்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்வது அருவருக்கத்தக்கதாகும்.

எனவே தேசியப் பாதுகாப்பை சக்தி மிக்கதாக ஆக்கும் பொருட்டு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணையுமாறு நாம் கேட்டுக் கொள்கிறோமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தே)

# திருமண வீட்டுக்குச் சென்ற பெண் மோட்டார் சைக்கிளில் இருந்து நிலத்தில் விழுந்து உயிரிழப்பு!

இணுவில்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் நிலத்தில் வீழ்ந்ததில் தலையில் அடிபட்டதால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இணுவில் சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது. டச்றோட் மானிப்பாயைச் சேர்ந்த 52 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான பத்மநாதன் பத்மாவதி என்ற பெண்னே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருமண வீடு ஒன்றிற்கு மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்றுகொண்டிருந்த சமயம் இணுவில் பகுதியில் வீதியில் வந்துகொண்டிருந்த மூரிமட்டை வியாபாரியை முந்துவதற்கு எத்தனித்த போது மூரிமட்டையுடன் மோதி மேற்படிப் பெண் நிலத்தில் வீழ்ந்தார்.

இதனால் தலையில் பலமாக அடிபட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சை பலனளிக்ககாத நிலையில் உயிரிழந்தார். பெண்னின் சடலம் யாழ். போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## குண்டு வெடிப்புச் சம்பவத்தை அரசாங்கம் கண்டிக்கிறதாம்!

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமானது அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என, கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த பாதுகாப்பற்ற நிலைமையின் மத்தியிலேயே தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்கு வரக்கூடியதாக இருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச, கொள்ளுப்பிட்டி குண்டு வெடிப்புச் சம்பவம் நாட்டில் யுத்த நிலையை ஏற்படுத்தவில்லை என்றும். அரசாங்கம் தாம் உறுதியளித்தபடி கடந்த மூன்று மாதங்களில் பல பணிகளை நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## இடைநிறுத்திய...

பில் இருப்பதாகவும் இவர்கள் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கரும்புலிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்திருந்தால் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை மீறலென குற்றச்சாட்டு சுமத்தப்படும்.

இந்தப் புலிகளின் குழுவினர் இரத்மலானையிலிருந்து வத்தளை வரைபாதுகாப்பான இல்லங்களில் தங்கியிருப்பதாகவும் உளவுப்பிரிவிற்கு விபரங்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கருணாவின்...

கோல்சர் ஒன்று, கையடக்கத் தொலைபேசி ஒன்று, வயர்கள், மருந்துப் பொருட்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

இராணுவத்தினர் பயன்படுத்தும் பொருட்களென இவையாவும் அடையாளம் காணப்பட்டன. அத்துடன் இப்பொருட்கள் யாவும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக மக்களுக்கு விடுதலைப்புலிகள் கருத்துத் தெரிவிக்கையில்-

பணத்திற்காகவும் அற்ப ஆசைகளுக்காகவும் தேசவிரோதிகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் தமது பிள்ளைகள் ஈடுபடாமல் பார்க்குமாறு பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து எமது அமைப்பில் இணைந்து இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் எதுவித அச்ச உணர்வுமின்றி தமது பெற்றோருடன் இணைந்து கல்வி, பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை தமிழ்த் தேசியத்திற்காகப் பற்றுணர்வுடன் செயற்பட விரும்புவோர், எமது தாயக மீட்பில் அக்கறை கொண்டு தங்கள் சுயவிருப்பின் பேரில் எம்முடன் இணைந்து செயற்படலாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## லண்டனில்....

ளைக் குறைக்கும் நோக்குடனேயே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

இது தொடர்பாக, மெட்ரோ பொலிரன் பொலிஸ் கொமாண்டர் அல்பிரட் ஹிச்கொக் தகவல் தருகையில் -

இலங்கைத் தமிழ் மக்களுக்கு சில சிறிய குழுக்கள் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன.

இவற்றை நாம் உன்னிப்பாக அவதானித்துவந்தோம். இதனையடுத்து இந்தத் தேடுதல் நடத்தப்பட்டு அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்த நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறும்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

ஒரு மறைவிடத்தில் இருந்து கைதுசெய்யப்பட்ட ஐவர் திருட்டுச் செயல்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இவர்களிடம் இருந்து 3 வாள்கள், 3 கோடரிகள், பேஸ்போல் மட்டைகள், ஹொக்கி மட்டைகள், கிரடிட் காட் வாசிப்பு கருவி மற்றும் கிரடிட் காட்டுகள் என்பனவும் மீட்கப்பட்டன.

இன்னொரு இடத்திலிருந்து ஐவர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் களவு மற்றும் நிதி மோசடிகளில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இவர்களிடம் இருந்து 11 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ், 4500 வெற்றுக்காசோலைகள், 69 கிரடிட் காட்டுகள், 2 கணினிகள், 15 வீடியோ றெக்கோடர்கள், 30 ஆயிரம் பவுண்ஸ பெறுமதியான மெசிடஸ் கார் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இன்னொருவர் நொதாம்டனில் இருந்து கைதுசெய்யபட்டார். மேலும இருவர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த 'ஒப்பரேசன் என்வர்' நடவடிகையில் சுமார் 500 அதிகாரிகள் தொடர்புபட்டிருந்தனர். பிறென்ட், ஹரோ, றெட்பிறிஜ், குறொய்டொன், நியூஹாம், சவுத்ஹாம் ஆகிய ஆறு நகரங்களிலுள்ள 22 இடங்களே சுற்றிவளைப்புக்குள்ளாகின என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட பெண்...

ஒன்றாக அமைச்சரைச் சந்திப்பதற்கு வருகை தந்த இந்தப் பெண்,

தற்கொலைதாரியை முதலில் அமைச்சரைச் சந்திக்க அனுமதிக்குமாறு பாதுகாப்புப் பிரிவினரிடம் கூறியுள்ளார்.

தற்கொலைதாரியை சோதனையிட பாதுகாப்புப் பிரிவினர் முற்பட்ட போது அதற்கு அனுமதிக்காத அவர், அங்கிருந்து மாடிப்படிகளின் வழியாக கீழிறங்கிச் சென்றார்.

இதேவேளை - குறிப்பிட்ட தற்கொலைதாரியுடன் இந்தப் பெண் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவருடைய அலுவலகத்தில் சென்று சந்தித்துள்ளதாகவும், அது ஒரு ஒத்திகை நடவடிக்கையாக அமைந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - கைதுசெய்யப்பட்ட பெண், யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பணிபுரிபவரென பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இவர் தனது சம்பளப் பணத்தைப் பெறுவதற்காகவே கொழும்பிலுள்ள இந்து கலாசார அமைசசின் அலுவலகத்துக்கு வந்ததாக விசாரணைகளின்போது குறித்த பெண் தெரிவித்ததாக உளவுப்பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பெண், தற்காலிகமாகத் தங்கியிருந்ததாகக் கூறப்படும் கொழும்பு விடுதியொன்றும் உளவுப் பிரிவின் விசேட குழுவினரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக புலனாய்வுப் பிரிவினரால், 50 பேர் வரை விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும், அவர்களில் ஈ.பி.டி.பி. அங்கத்தவர்களும், இந்து கலாசார அமைச்சில் பணிபுரிபவர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கைதுசெய்யப்பட்ட யுவதியை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்செய்த போது எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று இந்த யுவதியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது குற்றப் புலனாய்வுத்துறையினர், இவர் மீது குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் பணியாற்றிய பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டதாகக் கூறிய அவர்கள், இவர் தொடர்பான விசாரணைகள் முடிவடையவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், குறிப்பிட்ட யுவதியிடம் இரகசிய வாக்குமூலம் ஒன்றைத் தரமுடியுமா என நீதிவான் கேட்டபோது அதற்கு அந்த யுவதி சம்மதித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.